Registered as a Newspaper    பக்கங்கள் 6    விலை ரூபா 5-00


# ஈழநாதம்

Eelanaatham    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 5    திருவள்ளுவர் ஆண்டு 2025    சித்திரை 19    (02.5.94)    திங்கட்கிழமை    ஓசை 73

## சிறிசேன கூரே ராஜினாமாவை டி. பி. யிடம் சமர்ப்பித்தார்

அமைச்சர் சிறிசேனகூரே தனது கட்சிப் பொதுச் செயலாளர் பதவியை ராஜினாமா செய்வதாக தெரிவிக்கும் கடிதமொன்றை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிடம் ஒப்படைத்துள்ளார். பி. பி ஸியின் சிங்களசேவை செய்தியாளர் எல், மோ. பெர்னாண்டோவிற்கு அளித்தபேட்டியிலேயே அவர் மேற்படி தகவலைத் தெரிவித்தார்: முன்னாள் ஜனாதிபதி ஆர் பிரேமதாசாவின் சிலை திறப்பு விழாவில் கலந்து கொண்டபின்னர் நேரடியாக ஜனாதிபதியை அவரது செயலகத்தில் சந்தித்து தன் ராஜினாமாக் கடிதத்தைச் சமர்ப்பித்ததாகவும், அக்கடிதத்தைப் பெற்றுக் கொண்ட ஜனாதிபதி தொடர்ந்தும் அமைச்சராகப் பதவி (6ஆம் பக்கம் பார்க்க)



நேற்றைய மேதின எழுச்சிப் பேரணியில் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் உருவப் படம் தாங்கிய ஊர்தியை மக்கள் இழுத்துச்செல்வதை படத்தில் காணலாம்.

நேற்றைய மேதினக் கூட்டத்தில் கலந்துகொண்ட மக்களின் ஒரு பகுதியினரை படத்தில் காணலாம்.



# யாழ்நகரில் மாபெரும் எழுச்சிப் பேரணி; பல்லாயிரக்கணக்கில் மக்கள் திரண்டனர்

## நூற்றுக்கணக்கில் ஊர்திகள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் ஏற்பாடுசெய்த மே தின விழா நேற்று யாழ். குடாநாட்டில் எழுச்சிபூர்வமாக நடைபெற்றது. விடுதலைப்புலிகள் இயக்கத்தினதும், தொழிற்சங்கங்களினதும்,

## பிரேமா உருவச்சிலை திறப்பில் டி. பி. கலந்து கொள்ளவில்லை

(கொழும்பு)

...நடைபெற்றது. விடுதலைப்புலிகள் இயக்கத்தினதும், தொழிற்சங்கங்களினதும் அழைப்பை ஏற்று மேதினப் பேரணியில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். இப் பேரணியில் விடுதலைப்புலிகள் இயக்க படைப் பிரிவுகளின் அணிநடைகளுடன், காவல்துறையின் அணி நடையும், மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட ஊர்தி பவனியும் இடமபெற்றது; இப் பேரணியின் முடிவில் மாபெரும் பொதுக்கூட்டமும், கலை நிகழ்ச்சியும நடைபெற்றன.

நேற்றைய மேதின விழாவில் அனைத்து தொழிற்சங்கங்கள். மற்றும் பொதுசன அமைப்புக்கள், அரச, தனியார் நிறுவன ஊழியர்கள் உட்பட பொதுமக்கள் அனைவரும் ஒன்றாக இணைந்து கலந்து கொண்டனர்.

ஏற்கனவே திட்டமிட்டவாறு நேற்று மாலை 2-20 மணியளவில் மருதனார்மடம் சந்தியில் இருந்து மேதின எழுச்சிப் பேரணி ஆரம்பமாகியது. ஆரம்பத்தில் தமிழீழத் தேசியக்கொடி ஏந்திச் செல்லப்பட்டது. அதனைத் தொடர்ந்து ''பான்ட்'' வாத்தியம் முழங்க வாத்திய அணியும் சீருடை அணிந்த விடுதலைப் புலிகளின் அணியும், விடுதலைப் புலிகளின் மகளிர் அணியும், விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் அணியும் அணிவகுத்துச் சென்றன. அதன் பின்னால் தமிழீழக் காவல் துறையினரும், விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பினரும் அணிவகுத்துச் சென்றனர். இவர்களைத் தொடர்ந்து மதகுருமார் பலரும் அணிவகுத்துச் சென்றனர். இவற்றைவிட கோட்ட ரீதியாகவும் வட்டரீதியாகவும் ஒழுங்குபடுத்தப்பட்ட தொழிற் சங்கத் தொண்டர்களும் பொது மக்களும் இப்பேரணியில் கலந்து கொண்டனர். கோட்டவாரியாக ஒழுங்கமைக்கப்பட்ட ஒவ்வொரு அணியிலும் கூட்டுறவுத்துறை ஊழியர்கள், கிராமிய உழைப்பாளர்கள். கல்விசார் ஊழியர்கள், மாணவர்கள் மற்றும் உள்ளூராட்சி ஊழியர்கள், சுகாதாரப்பகுதி, பொறியியல் பகுதி ஊழியர்கள், மற்றும் பொதுமக்கள் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# பரந்த அர்த்தத்தில் மே தினம் தமிழீழத்தில் நினைவு கூரப்படுகிறது

**- பாலகுமாரன்**

(யாழ்ப்பாணம்)

கொழும்பைப் பொறுத்தவரை அங்கே மேதினம் என்று சொன்னால் எதிர்க் கட்சிகள் தாம் பதவிக்கு வருவதற்கான வாய்ப்பைத் தேடுகின்ற சந்தர்ப்பமாகவும் ஆளும் கட்சிகளியாட்டங்களை நடாத்தி தங்களது பொட்டுக்கேடுகளை மறைக்கும் நிகழ்வாகவுமே இருந்து வந்தது. ஆனால் இம் முறை தொழிலாளர் வர்க்கத்திற்கு நல்ல காலமாக ஐ. தே. கட்சி கொண்டாட்டத்தை ஏதோ காரணத்திற்காகநிறுத்தி விட்டது.

என நேற்று மேதின பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தமிழீழ கல்விக் கழகத்தைச்சேர்ந்த பாலகுமாரன் கூறினார் அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில் இன்று

(6ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச பாட்டாளி வர்க்கம் எம்மை அங்கீகரிக்கவேண்டும்

**- நடேசன்**

(யாழ்ப்பாணம்)

''எமது போராட்டம் நியாய பூர்வமானது எமது விடுதலைப் போராட்டம் மூலமாக எமது தேசியத்தையும், இறைமையையும் நிலைநாட்டுவதற்காக நாம் போராடுகின்றோம். எமதுதேசியம் அங்கீகரிக்கப்பட வேண்டும், எமது சுயநிர்ணய உரிமை சர்வதேச பாட்டாளி வர்க்கத்தால் அங்கீகரிக்கப்படவேண்டும், நாம் சர்வதேச பாட்டாளி வர்க்கம் நடாத்தும் ஒவ்வொரு போராட்டத்துக்கும் நிபந்தனையற்ற ஆதரவும், உதவிகளும் செய்வதற்கு தயாராக இருக்கின்றோம். எனவே சர்வதேச பாட்டாளி வர்க்கமானது எமது போராட்டத்தையும் சுயநிர்ணய உரிமையையும் அங்கீரிக்க வேண்டும்''

இவ்வாறு யாழ் பல்கலைக் கழக மருத்துவ பீட மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்ற மேதினப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய தமிழீழக் காவல் துறைப் பொறுப்பாளர் திரு நடேசன் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசும் போது சர்வதேச பாட்டாளி வர்க்கமானது வெறும் சொல்லள

(6ஆம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சியிலும் மேதினப் பேரணி

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நேற்று மேதினத்தை முன்னிட்டு பேரணியும் பொதுக் கூட்டமும் இடம்பெற்றன. இரணைமடுச் சந்தியிலிருந்து புறப்பட்ட மேதினப் பேரணி கிளிநொச்சி செயலக மைதானத்தில் சென்று நிறைவடைந்தது.

விடுதலைப் புலிகள் மாணவரமைப்பின் அணிவகுப்புடன் நடைபெற்ற இப்பேரணியில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட பொது மக்கள் கலந்து கொண்டதுடன் 50க்கு மேற்பட்ட ஊர்திகளும் பவனிவந்தன.

கிளிநொச்சி செயலக மைதானத்தில் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

(கொழும்பு)

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவின் ஓராண்டு நினைவு நிகழ்ச்சிகள் நேற்றுபுதுக்கடை சென் செஸ்திடன் மேட்டில் இடம்பெற்றது. இங்கு நிறுவப்பட்ட பிரேமதாசாவின் உருவச்சிலையை முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா நேற்றுக் காலை திரைநீக்கம் செய்தார்.

இந் நிகழ்வில் பிரதமர் ரணில், சபாநாயகர் எம்.எச். முகமட், வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேனகூரே, அரசியல் கட்சி பிரமுகர்கள், பிரேமதாசாவின் உறவினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். பிரேமதாசாவின் உருவச் சிலைக்கு இவர்கள் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

எனினும் இந் நினைவு தின நிகழ்வில் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா கலந்து கொள்ளவில்லை. சுகவீனம் காரணமாக இந் நிகழ்வில் தாம் கலந்து கொள்ளவில்லை என அவர் அனுப்பி வைத்திருந்த செய்தியில் குறிப்பிட்டிருந்தார். ஜனாதிபதியின் செய்தியை அவரின் செயலாளர் அங்கு வாசித்தார்.

முன்னதாக பிரேமதாசாவின் உருவச் சிலையை ஜனாதிபதி விஜேதுங்காவே திறந்து வைக்க இருந்ததும் இதற்கு பிரேமதாசாவின் குடும்பத்தினர் எதிர்ப்பு தெரிவித்ததுடன் ஜனாதிபதி கலந்து கொள்ளும் நிகழ்வுக்கு தாம் வருகை தர முடியாது என குறிப்பிட்டிருந்ததும் தெரிந்ததே.

# டி.பி. கலந்து கொள்ளாமைக்கு பாதுகாப்பு இன்மையே காரணமாம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதிபிரேமதாசாவின் உருவச் சிலையை திரை நீக்கம் செய்யப்பட்ட வைபவத்தில் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா கலந்துகொள்ளாமைக்கு பாதுகாப்பு பற்றிய அச்சமே காரணமாகும் எனக் கூறப்படுகின்றது. தலைநகரான கொழும்பு மத்திய பகுதியிலும்கூட பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு பாதுகாப்பு படையினரால் இயலாமல் இருப்பதே காரணம் எனவும் பி.பி.சி. மேலும் கூறியுள்ளது.

சில நாட்களுக்கு முன்னர் உல்லாசப் பயணிகள் விடுதியில் குண்டுகள் வெடிக்கப்பட்டமையானது பிரேமதாசா கொல்லப்பட்ட ஒருவருடத்தின் பின்பும் கொழும்பில் தாக்குதல்நடத்துவதற்கு இயலும் என்பதை வெளிக்காட்டியுள்ளது.

# தொண்டமான் வெளிநாடு பயணம்

(கொழும்பு)

அமைச்சர் தொண்டமான் அடுத்த வாரம் வெளிநாடு பயணமாகின்றார். சுற்றுலாத்துறை சம்பந்தமாக பல நிகழ்ச்சிகளில் பங்குபற்ற இவர் சிங்கப்பூர், மலேசியா ஆகிய இடங்களுக்குபுறப்படுகின்றார் எனத் தெரிவிக்கப்பட்டது.

# எதிர்க்கட்சி ஊர்வலத்தில் பெருமளவில் மக்கள்

(கொழும்பு)

கொழும்பில நேற்று எதிர்க் கட்சியினர் நடத்திய மேதினப் பேரணியில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டதாகவும், ஊர்வலத்தின் ஒரு பகுதி சிவப்பு மயமாகவும், மற்றொரு பகுதி நீல மயமாகவும் காணப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

எதிர்க்கட்சியின் ஊர்வலத்தில் கலந்து கொண்ட மக்கள் மத்தியில் ஒரு வித குதூகலமும், 17 ஆண்டுகளுக்கு பின்னர் ஆட்சியை மீண்டும் பிடி

(6ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினை தீர்வு தொலைவிலேயே உள்ளது

**பி. பி. ஸி தெரிவிப்பு**

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா கொல்லப்பட்ட ஒரு ஆண்டின் பின்னர் இனப் பிரச்சினைக்கான தீர்வு முன் எப்போதும் இல்லாத வகையில் மிகவும் தொலைவிலேயே இருப்பதாக பி.பி ஸி நேற்றுத் தெரிவித்தது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

டச்சு வீதி சாவகச்சேரி வடக்கு மண்டுவில் அம்மன் கோவில் வீதியில் நல்ல தண்ணீர் கிணற்றுடன்வீடும் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு தொடர்பு வித்துவான் வே. ஆறுமுகம் சாவகச்சேரி. (சி-9325)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

ஆரியகுளம் சந்தியில் உள்ள பாரத் உணவகத்தில் ஒரு தொகைப்பணம் உரிமையாளரினால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும். (8176)

### அக்கரைச் சீமையில் நாவல்

250 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நாவல் அக்கரைச் சீமையில் 50/- புதிய களம் வித்தியாசமான பாத்திரங்கள் விறுவிறுப்பான கதை ஓட்டம் சமகால நிகழ்வுகள். (8171)

### விற்பனைக்கு

1) 8 அடி × 4 அடி விஸ்திரணம் கொண்ட ஒன்றரை நூல் தடிமன் இரும்புத்தகடு.

2) நான்கு உருளி கொண்ட 4 அடி × 2 அடி இரும்பு வண்டில், ஆகியவை விற்பனைக்குள்ளன, "மில்க்வைற்" 525/2, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். [சி 9313]

## தனிநாயகம் அடிகள் நினைவுப்பேருரை

தனிநாயகம் அடிகளாரின் 2-வது ஞாபகார்த்தப் பேருரை யாழ் புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 6-ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெற உள்ளதுதென்னிந்திய திருச்சபை ஆயர் கலாநிதி எஸ் ஜெபநேசன் அவர்கள் "தமிழ்தூது - தத்துவ போதகர் முதல் தனிநாயகம் அடிகள் வரை" என்ற தலைப்பில் இப் பேருரையை நிகழ்த்த உள்ளார் என தனிநாயக தமிழ் மன்ற இயக்குனர் அருட்திரு எஸ். ஏடவின் அடிகளார் தெரிவித்துள்ளார். (17)

## எடிசன் அக்கடமி

[யாழ்: இந்து அருகில்]
411/1, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்

[கொக்குவில் இந்து அருகில்]
27, கே. கே. எஸ். வீதி
கொக்குவில்,

**எமது இரு நிறுவனத்திலும்**

**O/L DAY CLASS**

**புதிய பிரிவு**

**ஆரம்பம்: 03-05-94 செவ்வாய் 8 மணி**

- யாழ். பிரபல ஆசிரியர் குழு
- கணிதம் வாரத்தில் 6 மணி நேர வகுப்பு.
- கணிதம் அடிப்படையில் இருந்து போதிப்பதுடன் 18 வருட வினாக்களும் மீட்கப்படும்,

[சி-9322]

## பிறிமா கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு

பிறிமா பேட்டுக்குஞ்சுகள் [1½ மாத வளர்ப்பு] பிறிமா லோமன் இறைச்சிக் குஞ்சுகள் [இரண்டு வார வளர்ப்பு] இவ் இரு இனங்களும் எம்மிடம் உடன் விற்பனைக்குண்டு. பண்ணையாளர்களும் கோழி வளர்ப்போரும் உடன் தொடர்பு கொண்டு விலை விபரங்களை தெரிந்து கொள்ளுங்கள். எம்மிடம் பிறிமா கோழித்தீனிகளும் விற்பனைக்குண்டு. நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய எமதுஸ்தாபனங்கள்:

**சுகபாணி களஞ்சியம்**
2/4, மருத்துவமனை வீதி,
(சத்திரச்சந்தி அருகாமை)
யாழ்ப்பாணம்.

**மாலவன் வர்த்தக நிலையம்**
138, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்,
பிறிமாவின் யாழ் மாவட்ட முகவர்

எமது இல்லத்திலும் தொடர்பு கொள்ளலாம்.

54, பலாலி வீதி
கந்தர்மடம்.
யாழ்ப்பாணம்.

கோழி வளர்த்து பயன்பெறுங்கள்

(சி 9318)

## தேவை ஆண் தையல்காரர்

எமது தையல் நிலையத்தில் துண்டுக்கூலி அடிப்படையில் ஆண் தையல்காரர் வெற்றிடம் உள்ளது. தகைமையுடையோர் தங்கள் விண்ணப்பங்களை 16-5-94-ம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர். பொதுமுகாமையாளர், பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்

## மீன்வலை திருடியவர் மீது வழக்குத் தாக்கல்

(வடமராட்சி)

மீன்பிடி கரைவலையை திருடிய ஒருவர் மீது நாகர்கோயில் காவல்துறையினர் பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

மேற்படி வலையை திருடிய நாகர்கோயில் கிழக்கைச்சேர்ந்த வி. யோகலிங்கம் என்பவருக்கு பருத்தித்துறை தமிழீழ நீதிமன்ற நீதியாளர்பிரதீபா, களவாடிய குற்றத்திற்காக, ஆயிரத்துஐந்நூறு ரூபா குற்றமும் இழப்பீடாக 2 ஆயிரம் ரூபாவும் செலுத்துமாறும் தவறின் 60 நாட்கள் சிறைத் தண்டனையும் விதித்துள்ளார் (யோ)

## பாடசாலை திறப்பு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் உடுத்துறையில் பாலர் பாடசாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அவ்வூர் மக்களின் வேண்டுகோளுக்கிணங்க இப் பாலர் பாடசாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது. (36)

''பார்த்தவன் கண்ணுக்கு தெரிவேன் என்றான் பாரதத்தில் கண்ணன்''

**நாங்கள் கூறுகிறோம்**

(ஸ்ரான்லி வீதி, மக்கள் வங்கிக்கு முன்பாக)

**உங்கள் கண்களுக்கு தெரியும்**

## கண்ணன் கீதை

எங்கட சனங்கள் மற்றவர்களிலும் பார்க்க விலை குறைய விற்றால்தான் வாங்குபவர்கள் என்ற உண்மையை உணர்ந்து நாம் வியாபாரம் செய்கின்றோம்! (8180)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## சட்டவிரோத கள் விற்பனை குற்றப்பணம் அறவீடு

கள்ளு விற்பனைச்சாலைக்கு கள்வழங்காமல் சட்டவிரோதமாக வீட்டில் வைத்து விற்பனை செய்த ஒருவருக்கு 5 ஆயிரம் ரூபா குற்றம் அறவிடப்பட்டது.

அல்வாய் வடக்கு மாறாம் புலத்தைச் சேர்ந்த தொழிலாளி ஒருவர் வீட்டில் வைத்து கள் விற்பனை செய்து கொண்டிருந்தபோது பருத்தித்துறை காவல்துறையினரிடம் மாட்டிக் கொண்டார்.

இவருக்கு இக் குற்றத்திற்காக பருத்தித்துறை தமிழீழ நீதிமன்ற நீதியாளர் பிரதீபா மேற்படி குற்றப்பணம் அறவிடுமாறு கட்டளையிட்டார். (யோ)

## நில அளவைப் பயிற்சிக்கு விண்ணப்பித்தோருக்கான நேர்காணல்

நில அளவைப் பயிற்சிக்கு விண்ணப்பித்தோருக்கான நேர்காணல் எதிர்வரும் 11.5.94 புதன்கிழமை காலை 9 00 மணிக்கு யாழ்ப்பாணம் - ஆரியகுளம் சந்திக்கு அருகாமையில் இருக்கும்.

'புதிய உயர் கல்லூரி"

என்ற கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது விண்ணப்பித்தோர் தேவைப்படும் சான்றிதழ்களின் மூலப் பிரதிகளுடன் நேரில் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இதுவரை மேற்படி பயிற்சிக்கு விண்ணப்பிக்காதோர் இப்பயிற்சிக்குத் தோற்ற விரும்பின், 12 5.94 வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு தமது விண்ணப்பத்துடனும், சான்றிதழ்களின் மூலப் பிரதிகளுடனும் சமுகமளிக்கவும்.

இயக்குநர்,
தமிழீழ நில அளவையாளர் ஒருங்கிணைப்புக் கழகம்.
(சி 9303)

## கண்ணீர் அஞ்சலிகள்





29-04-94 அன்று சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவடைந்த

**மன்னார் மாவட்ட**

**மேஜர் பாலையா**

**கப்டன் மில்ரன்**

ஆகிய இருவருக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரி[illegible]ம்.

**குமார் புடைவை மாளிகை**
முத்திரைச் சந்தி - நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(சி-9324)

## விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வேலணை ப, நோ, கூ, சங்கம் தனதுபாவனையாளரிற்கு ஆடி, புரட்டாதி மாதங்களிற்கான பாடசாலைமதிய உணவு முத்திரைகளுக்கு பொருள்களை விநியோகித்து வருகிறது, (88)

## இன்றைய நிகழ்வு

(குருநகர்)

கிளி- முல்லை மாவட்ட கத்தோலிக்க திருச்சபையின் மேம்பாட்டு நிலையத்தால் இன்று திங்கட்கிழமை காலை 9 00 மணிக்கு சௌந்தர மண்டபத் திறப்பு விழாவும், மறை ஆசிரியர் பயிற்சியும் ஆரம்பித்து வைக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ஆயர்கலாநிதிதோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெறும் மேற்படி வைபவத்தில் திருப்பலி ஒப்புக் கொடுத்தலும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற இருக்கின்றன (21)

## அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வட்ட லியோ கழகம் வதிரியிலுள்ள சிறீபரமானந்த ஆச்சிரமத்தில் இருக்கும் ஆதரவற்ற 47 சிறுவர்களுக்கு சுமார் ஏழாயிரம் ரூபா பெறுமதியான கொப்பிகள், பாடசாலை உபகரணங்கள், சீப்பு, சவர்க்காரம், துவாய்கள், கைக்குட்டைகள் போன்றவற்றை வழங்கியுள்ளது, இச்செயற் திட்டத்தில் பங்கேற்ற யாழ் லயன்ஸ் கழகம் இந்த ஆசிரமத்திற்கு மூன்று பெற்றோமக்ஸ் விளக்குகளையும் வழங்கியுள்ளது.

---

டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

பொதுமுகாமையாளர்
பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்
(சி-9302) சங்கானை

---

## 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்



### அமரர் கந்தையா சுப்பிரமணியம்

**தோற்றம்:** 04-02-1928 **மறைவு:** 02-04-1994

கடந்த 02-04-94 இல் அமரத்துவம் அடைந்த எமது அன்புத் தெய்வம் திரு. கந்தையா சுப்பிரமணியம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியை இன்று 02-05 94 அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளது. அத்தருணம் உறவினர், நண்பர்கள் அனைவரும் சமுகம் தந்து அன்றைய தினம் எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசன வைபவத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு சகல வகையிலும் உதவி புரிந்த அனைவர்க்கும் எமது அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குமார், -குடும்பத்தினர்.
லக்கி ஸ்ரோர்ஸ்,
சித்தன்கேணி.
02-05-94 (8174)

---



அமரர்

### தப்பு சுப்பிரமணியம்

(ஓய்வு பெற்ற இலிகிதர்)

சங்கத்தானை

தோற்றம் 14-07-1921 மறைவு 02-04-1994

பாசமுள்ள எம் தந்தை
பாரை விட்டு ஏகிவிட்டார்
பாசமுள்ள நாங்களெல்லாம்
பரி தவித்து நிற்கின்றோம்
சீலமுடன் வளர்த்து - எம்மை
சிறப்பாக்கி வாழ வைத்தார்.
மூ பத்து நாள் முடிந்தும்
துன்பந்தான் தீரவில்லை.
திரு உருவம் மறைந்தாலும் - எம்
நினைவெல்லாம் அவர் உருவம்,
(''பிறப்பின் முடிவெல்லாம் இறப்பு'')

இதை எண்ணி

அவர் ஆத்ம சாந்திக்காய்
என்றென்றும் பிரார்த்திப்போம்

சாந்தி!! சாந்தி!! சாந்தி!!

அமரர் சுப்பிரமணியம் அவர்களின் இறுதிக் கிரியைகளிலும் அந்தியேட்டிக் கிரியையிலும் உதவியோர்க்கும் பங்கு பற்றியோருக்கும்

எமது நன்றிகள்

அன்னாரது வீட்டில் இன்று நடைபெறும் 31ஆம் நாள் நினைவஞ்சலி வைபத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

சங்கத்தானை. மக்கள், மருமகள்கள்
சாவகச்சேரி பேரப்பிள்ளைகள், சகோதரர்
(சி-9317)

---

## நினைவு கூருகின்றோம்...
## 02.05.1994

1988ஆம் ஆண்டு திருமலை பன்குளம் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். நாதன்** (நடராசா சண்முகம்- பன்குளம் - திருமலை)

**மோகன்** (வடிவேல் இலங்கேஸ்வரன் - உவர்மலை - திருமலை)

மன்னார் - திராட்டிக்குளம் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய,

**கர்ணன்** (சுப்பிரமணியம் ஆனந்தநாதன் - ஆலங்கேணி, திராட்டிக்குளம்-பூநகரி-மன்னார்)

1989ஆம் ஆண்டு யாழ் - பருத்தித்துறை முதலாம் கட்டைப்பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

**கப்டன் குட்டி-அரன்** (நாகராசா ஞானகுலசிங்கம்- அரசடி, தொண்டமானாறு - யாழ்)

இதே சம்பவத்தின் போது இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 03 தமிழ்மக்கள்,

1991ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**ஜெயக்கொடி** (கந்தையா இராசபதி - ஊஞ்சல் கலட்டி, நெடுங்கேணி-மணலாறு)

மட்டு - பெரியபுல்லுமலையில் கூட்டுறவுக்கடையில் பொருள்கள் வாங்கிவந்தவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது சுட்டுக் கொல்லப்பட்ட 04 தமிழர்,

1993ஆம் ஆண்டு திருமலை - பம்புருஸ்கவெவ சிறிலங்கா இராணுவ முகாம் காவலரண் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**கப்டன் திலீபன்-தொல்காப்பியன்** (சண்முகராசா சேர- பாரதிபுரம்-திருமலை)

**கப்டன் நளன்-செல்லத்தம்பி** (யோகராசா சுபாஸ்கரன் - திரியாய் - திருமலை)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-9320)




# தாவரவியல் - வழிகாட்டல் குறிப்புகள்

இரு வருடத்திற்கான விரிவான பாடப்பரப்பையும் செய்முறை வகுப்புக்களையும் கொண்ட தாவரவியல் பாடத்திட்டத்தை முழுமையாக இக்கட்டுரையில் விபரிக்கவில்லை பதிலாக இறுதிப்பரீட்சை நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் அப்பரீட்சையை மையமாகக் கொண்டு பரீட்சை வினாக்களுக்கு விடையளிக்கக்கூடிய வகையில் இலகுவான வழிகாட்டல் முறையை வழங்குவதுடன் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு ஏற்படுகின்ற பரீட்சைபற்றிய அச்சத்தை நீக்குவதற்கும் இக் கட்டுரை உதவுமென நம்புகிறோம்.

தாவரவியல் பாடத்திற்கான வினாக்கள் எவ்வாறான அடிப்படையின் கீழ் தயாரிக்கப்படுகின்றது என்பதனையும் அதற்கேற்றவகையில் மாணவர்கள் தம்மை எவ்வாறு தயார்படுத்த வேண்டும் என்பதனையும் முதலில் கவனத்தில் கொள்ளல் வேண்டும்

பகுதி I, பகுதி II, என இரு பகுதிகளைக் கொண்ட வினாப்பத்திரத்தில் பகுதி I ல் பல்தேர்வு வினாக்களும் (கவனக்கலைப்பான்) பகுதி II ல் அமைப்புக் கட்டுரை வினாக்களும், கட்டுரை வினாக்களும் குறிப்பிட்ட ஒழுங்கமைப்பின் கீழ் தயாரிக்கப்படுகின்றன.

பல்தேர்வு வினாக்களை கருத்திற்கொள்ளும் போது பின்வரும் அம்சங்கள் அடிப்படையாக கையாளப்படுகின்றன.

(அ) பாடத்திட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு அலகுரீதியில் (Units) வினாக்களின் ஒழுங்கு காணப்படுதல்.

(ஆ) அவ்வினாக்கள் பொதுவாக பாடத்திட்டத்திற்குரிய முழுப் பாடப்பரப்பையும் உள்ளடக்கியிருப்பதுடன் சில வினாக்களில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய தகவல்களும் சேர்த்துக் கொள்ளப்படுதல்.

(இ) வேறு சில வினாக்களில் பழைய வினாக்களின் கருமாற்றமடையாமலிருக்க வடிவத்தை மாற்றிக் கொடுப்பதன் மூலம் வினாவை கடினமாக்கிக் கொள்ளுகின்ற முறையும் அண்மைக் காலங்களில் கையாளப்படுகின்றது

உதாரணமாக;

93 AUG பரீட்சையில் புரோகரியோற்றாக்களில் காணப்படாதது எனும் வினாவில் கொடுக்கப்பட்ட ஐந்து விடைகளில் மீசோசோம் (Mesosome) எனும் அமைப்பையும் ஒரு விடையாகப் புகுத்தியமை - அது பற்றிய தேடலுக்கு வழிவகுக்கின்றது.

(ஈ) கணிசமான வினாக்களில் தவறான கூற்றைத் தெரிக எனும் முறை கையாளப்படுகின்றது இங்கு நான்கு சரியான தகவல்களை மாணவன் வினாவிலிருந்து பெற்றுக் கொள்ளமுடிகின்றது தவறான கூற்றுத் தெரிவு செய்யும் போது அதற்குரிய பொருத்தமான காரணத்தை தெரிந்து கொள்வதன் மூலமும் வினாத் தொடர்பான பயிற்சியை பெற முடிகின்றது.

(உ) ஒரு சில வினாக்களில் மாத்திரம் சூழலுடன் தொடர்புடைய விடயங்களை நேரடியாக அவதானித்து அவ் அவதானிப்புக்கள் மூலம் விடையளிக்க கூடிய வகையில் மாணவர் பரீட்சிக்கப்படுகின்றனர்.

உதாரணம்:

91, 92, AUG உருவவியல் வினாக்கள்

மேற்குறிப்பிட்ட விடயங்களை உள்ளடக்கியதான பல்தேர்வு வினாக்களை இலகுவாகக் கையாள்வதற்குக் கீழுள்ள சுருக்கக்குறிப்புக்களை அலகு ரீதியாக அவதானிப்போம்

## அலகு 1, 11

★ உயிருள்ளவற்றின் உள்ளடக்கம், உயிருள்ளவற்றின் சிறப்பியல்புகள் The Composition of Living Matter, Characteristics of Living Matter) என்னும் இரு [illegible]மே முதற் தொகுதி வினாக்களில் கேட்கப்படுகின்றன இவை [illegible]னால் BASIC BOTANY என அழைக்கப்படுகின்றன இவ்வலகுகளால வினாக்கள் தெரிவு செய்யப்படும் போது பின்வருவன பிரதான கருக்களாக அமையும்.

(அ) உயிருள்ளவற்றின் தனித்துவம் :- அனுசேபம் போசணை தன்னினத்தை நிலைக்கச் செய்தல் உறுத்துணர்ச்சி.

ஆ) உயிர்ப் பொருட்களின் ஆக்கக் கூறுகள்

கரைசல், பெனடிக்ரின் கரைசல் (Benedict's Solutions)

—தாழ்த்தா வெல்லத்திற்கான (Sucrose) பரிசோதனை: தாழ்த்தா வெல்லத்தை தாழ்த்தும் வெல்லமாக மாற்றுதல், பீலிங்கின் / பெனடிக்ரின் கரைசல் சேர்த்து வெப்பமேற்றல்

—பல்சக்கரைட்டுக்கான சோதனை: மாப்பொருள், அயடீன் கரைசல்

—அமைப்புக்குரிய கூறாகவும், ஒதுக்குகளாகவும் உள்ள காபோவைதரேற் வகைகள்

### கொழுப்புக்களும் எண்ணெய்களும் (Fats and Oils)

—C, H, O மூலகங்களை கொண்டிருத்தல் H, O என்பன 2:1 எனும் விகிதத்தில் காணப்படாமை

—கொழுப்பமிலம், கிளிசறோல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டிருத்தல் - கிளிசறோலின் கட்டமைப்பு

பிரதான இலிப்பிட்டுக்களின் முக்கியத்துவம் சக்தி தோற்றத்தில் இலிப்பிட்டுக்களின் பங்கு

—சுபரின், கியூற்றின், மெழுகு (Cutin, Suberin, Waxes) ஆகிய இலிப்பிட்டுக்களின் தன்மை

—(Sudan iii / Sudan iv) சூடான் iii / சூடான் iv சேர்த்து இலிப்பிட்டுக்களை அறிதல்

இலிப்பிட் இழையங்களுக்கு Sudan iii / iv ஐ சேர்த்து நுணுக்குக் காட்டியினூடாக அவதானித்தல்- சிவப்பு நிறக் கோலங்கள் - சிவப்புநிற சிறுருண்டைகள் தோன்றும்

### புரதங்கள் (Proteins)

CHONS ஆகிய மூலகங்களை கொண்டிருத்தல்

அடிப்படையலகாக அமினோ அமிலம் - அதன் பொதுச்சூத்திரம்

$$H_2N - \underset{R}{\overset{H}{\underset{|}{\overset{|}{C}}}} - COOH$$

என அமைதல் அமினோ அமில வகை, பெப்ரைட் பிணைப்பு உருவாதல் தொடர்பான அறிவை பெறுதல்

—புரதங்களின் சிறப்பியல்புகள்

உதாரணம்: வெப்பநிலையினால் பாதிக்கப்படுதல்

அமினோ அமிலத்தினாலான பல்பாத்து

உயர்வான மூலக்கூற்றுநிறை - போன்ற விடயங்கள்

- புரதங்களின் முக்கியத்துவம்
  கட்டமைப்புக் கூறுகளாகவும், சேமிப்பாகவும் காணப்படும் புரத வகைகள்

-நொதியங்கள் அனைத்தும் புரதங்கள் என்னும் எண்ணக்கருவை அடிப்படையாக வைத்து வினாக்கள் பரீட்சிக்கப்படுகின்றன :

உதாரணம்: அமைலேஸ் பல்பாத்தாக கருதப்படுதல் (92Aug (நொதியங்கள் எல்லாம் புரதங்கள், புரதங்கள் பல்பாத்துக்கள் ஆகவே நொதியம் பல்பாத்து)

புரதங்களுக்குரிய முக்கியமான சோதனைகள்

a) Biuret Test - $CuSO_4$, NaOH —> ஊதாநிறம்

b) Xanthoprotein Test - செறி $HNO_3$—> மஞ்சள்

C) Millon's reagent - சேர்த்ததும் வெண்ணிறம் வெப்பமேற்ற சிவப்பு

### கரு அமிலங்கள் (Nucleic acid)

- Nucleotideக்களினாலான பல்பாத்துக்கள்
- Nucleotide க்களின் ஆக்கக்கூறுகளாக வெல்லம் 5c) நைதரசன் மூலம், பொஸ்பேற் என்பன காணப்படுதல்
- வெல்லக் கூட்ட வகை, நைதரசன் மூலங்களின் வகைகளை அறிதல்
- DNA, RNA என்பவற்றின் அடிப்படையலகு, ஆக்கக்கூறுகள் காணப்படுமிடம், தொழில் என்பவற்றை அறிதல்
- DNAயின் ஆக்கக்கூறுகள் இரட்டைச்சுருளி வடிவத்திற்கு DOUBLE HELIX) வழிவகுத்தமை
  வெல்ல பொஸ்பேற் கூட்டம் முதுகெலும்பாகவும், முனைவுகளாகவும் தெழிற்பட்டு நைதரசன் மூலங்களுடன் சேர்த்து ஒன்றுக்கொன்று நேர்மாறானஇரட்டைஇழையமைப்பைத்தோற்றுவித்தல்
- WATSON - CRiCK என்பவர்களினது DNA,யின்திருத்தமான கட்டமைப்பு மாதிரி பற்றிய அறிவு
- DNA, யின் தற்பகர்ப்பு — மாற்றங்கள்
- புரதத் தொகுப்பில் DNA, RNA என்பவற்றின் பங்கு

### பல்பாத்து அலகுதியம்

பல் சக்கரைட், புரதம், DNA, RNA என்பவற்றின் அடிப்படை அலகுகள் பற்றி அறிதல்

## அலகு III - குழியவியல்- (Cytology)

குழியவியல் பகுதியில் பின்வரும் உப அலகுகளை அடிப்படையாக வைத்து நேரடியாக வினாக்கள் கேட்கப்படுகின்றன. ஒருசில பல்தேர்வு வினாக்களில் பிறப்புரிமையியல், கூர்ப்பு என்பவற்றுடன் தொடர்பு

- கலப்பிரிவு வகைகள், அவத்தைகள், நிகழும் மாற்றங்கள் என்பன முக்கியமாக அறிந்திருத்தல்.

1. இழையுருப்பிரிவு - அவத்தை - மாற்றங்கள்
2. ஒடுக்கற்பிரிவு - அவத்தை - மாற்றங்கள்

- ஒடுக்கற்பிரிவின் முக்கியத்துவம் மாறல் ஏற்படுவதற்கும், அங்கிகளுக்கிடையில் நிறமூர்த்த எண்ணிக்கை மாறாது பேணுவதிலும் ஒடுக்கற்பிரிவின் பங்கு எவ்வாறானது என்பதனை தெளிவாக்குதல்.

— அங்கிகளுக்கிடையில் மாறல் உருவாவதில் ஒடுக்கற்பிரிவின் முன்னவத்தை 1, மேன்முக அவத்தை 1 என்பன கொண்டுள்ள முக்கியத்துவம்

— பிறப்புரிமையியல், கூர்ப்பு தொடர்பாக இவ் அவத்தைகளின் முக்கியத்துவம் என்பன அறிந்திருத்தல்.

— கலக்கொள்கை, புன்னங்கங்கள் கண்டறிந்தமை வேறு குழியவியல் தொடர்பான விஞ்ஞானிகளின் பெயர்களும் கண்டுபிடிப்பும்

மேற்குறிப்பிட்ட அம்சங்கள் தொடர்பாக குறைந்தளவு வினாக்களே தாவரவியலின் குழியவியல் பாடப் பகுதியில் பல்தேர்வு வினாக்களில் கேட்கப்படுகின்றன. அமைப்புக் கட்டுரை வினாக்களில் பிறப்புரிமையியலுடன் தொடர்புபடுத்தியும் DNAயின் கட்டமைப்புடன் தொடர்புபடுத்தியும் தொடர்ச்சியாக பல வருடங்கள் வினாக்கள் போடப்பட்டுள்ளன,

## அலகு IV பாகுபாடும் பெயரிடுதலும் (CLASSIFICATION AND NOMENCLATURE)

ஃ தாவரவியலில் பல அலகுகளை ஒன்றிணைக்கும் தனி அலகாக இதனை கருதுதல் வேண்டும் அதாவது உருவவியல் தாவர இராச்சியப் பிரிவுகள், சூழலியல் போன்ற வெவ்வேறு பாட அலகுகளுக்கு இது அடித்தளமாக அமைகின்றது.

ஃ உயிரியல்பகுதியில் கல்விகற்கும் எல்லா மாணவர்களும் பெயரிடுதல் முறைபற்றி பூரணமாக அறிந்திருத்தல் அவசியமாகும் இருசொற் பெயரீடு (Bi - nomial Nomenclature) முறையிலுள்ள தத்துவங்களை முழுமையாக பின்பற்றி தாவரவியல் பெயர்கள் எழுதுவதற்கு தெரிந்திருத்தல் கட்டாயமானதாகும்.

உதாரணம்;

கடந்த 93 AUG -ல் நடைபெற்ற பரீட்சையில் அமைப்புக்கட்டுரை வினாவிற்கு தாவரவியற் பெயரீடு தமிழில் எழுதப்பட்டமையினால் அவ் வினாவிற்குரிய அதிகளவு புள்ளிகளை மாணவர்கள் இழக்க வேண்டியிருந்தது கூடுதலாக மட்டக்களப்பு திருகோணமலை போன்ற மாவட்ட மாணவர்கள் பெயரீடு பற்றிய போதிய விளக்கமின்மையால் அதிகளவு புள்ளிகளை இழக்கவேண்டியிருந்தது யாழ் மாவட்ட மாணவர்கள் பாதிக்கப்பட்டமை மிகக்குறைவாகும். பெயரீடு பற்றிய விளக்கம் தெளிவாகக் காணப்பட்டமையே இதற்குக் காரணமாகும்

ஃ 1989ஆம் ஆண்டு 'தாவரவியற் பெயரீடு' (Plant Nomenclature) எனும் நூலினூடாக பெயரீடு பற்றிய தத்துவங்கள் முதலில் அறிமுகப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

ஃ இருசொற்பெயரீடு முறையில்

(a) சாதிப் பெயரும் இனப்பெயரும் குறிப்பிடப்படுதல்
(b) சாதிப்பெயரின் முதலெழுத்து பெரிய ஆங்கில எழுத்திலும் (Capital) ஏனைய எழுத்துக்கள் சிறிய ஆங்கில (Small)எழுத்திலும் எழுதப்படுதல்
(c) சாதிப்பெயருக்கும், இனப்பெயருக்கும் கீழே தனித்தனி கோடிட்டுக் காட்டுதல்

ஃ இரு சொற்பெயரீடு என்பது சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள மரபுமுறை எனும் எண்ணக்கரு. உருவாக்கியவர்- (Linneaus) பெயரீடுபற்றிய லினேயர்ஸ் (Linneaus) இன்கருத்து.

சுப்பிரமணியம் செல்வநேசன்
ஆசிரியர்
சென்பற்றிக்ஸ் கல்லூரி
யாழ்ப்பாணம்.

ஃ பாகுபாட்டில் இயற்கை முறைப்பாகுபாடு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது: இங்கு அங்கிகளுக்கிடையிலுள்ள கூர்ப்புத் தொடர்பு அல்லது கணவரலாற்று ரீதியாக பாகுபாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது

ஃ இனம், சாதி, குடும்பம், வருணம், வகுப்பு, பிரிவு/கணம், இராச்சியம் வரை பாகுபாட்டினலகுகள் பயன்படுத்தப்பட்டிருக்கும் இயற்கைநிலையிலே மிகச்சிறிய அலகாக இனம் கருதப்படுகின்றது

ஃ புதிய பாகுபாடு முறையில் அங்கிகள் அனைத்தும் 5 இராய்ச்சியங்களாக வகுக்கப்பட்டுள்ளன.

(Modern Five Kingdom System)

A) Kingdom - Monera
B) Kingdom - Protista

அழைக்கப்படுகின்றன இவ்வலகுகளில் ...
போது பின்வருவன பிரதான கருக்களாக அமையும்.

(அ) உயிருள்ளவற்றின் தனித்துவம் :- அனுசேபம் போசணை தன்னினத்தை நிலைக்கச் செய்தல் உறுத்துணர்ச்சி.

ஆ) உயிர்ப் பொருட்களின் ஆக்கக் கூறுகள்

உயிர்ப்பொருட்கள் பல இரசாயன மூலகங்களினாலாக்கப்பட்டவை இவற்றுள் O, C, H, N ஆகிய மூலகங்கள் பிரதானமானவை

இம்மூலகங்களை அடிப்படையாகக் கொண்ட சேதனச் சேர்வைகளின் உருவாக்கம்.

## காபோவைதரேற்று (Carbohydrates)

C, H, O மூலகங்கள் காணப்படுதல் H: O ஆகிய மூலகங்கள் முறையே 2:1 என்னும் விகிதத்தில் அமைதல் $C_x(H_2O)_y$ எனும் பொதுச் சூத்திரத்திற்கு அமைதல் (Monosaccharide) ஒற்றை சக்கரைட் (Disaccharide) இரட்டை சக்கரைட் (Polysaccharide) பல்சக்கரைட் ஆகிய பிரதான வகைகளில் அடங்கும் பிரதான சேர்வைகளும். அவற்றின் முக்கியத்துவம் பற்றியும் குறிப்பிடுதல்

ஒற்றை சக்கரைட்டுகளானது ஏனைய இருசக்கரைட், பல்சக்கரைட் என்பவற்றின் அடிப்படையலகாகக் காணப்படுதல்

உதாரணம்: சுக்குரோஸ் —> குளுக்கோஸ் + புரக்ரோஸ்
மோல்ரோஸ் → குளுக்கோஸ் + குளுக்கோஸ்
மாப்பொருள் → குளுக்கோசின் பல்பாத்து
செலுலோஸ் —> குளுக்கோசின் பல்பாத்து
இனுலின் —> புரக்ரோசின் பல்பாத்து

—தாழ்த்தும் வெல்லங்களுக்கான சோதனை: பீலிங்கின் (Fehling's)

குழியவியல் பகுதியில் பின்வரும் உப அலகுகளை அடிப்படையாக வைத்து நேரடியாக வினாக்கள் கேட்கப்படுகின்றன. ஒருசில பல்தேர்வு வினாக்களில் பிறப்புரிமையியல், கூர்ப்பு என்பவற்றுடன் தொடர்புபடுத்தி கலப்பிரிவு உள்ளடக்கப்படுகின்றது அவற்றின் பிரதான அம்சங்களாவன:

-புரோகரியோற்றா, இயூகரியோற்றா கலங்களிற்கிடையிலான வேறுபாடுகளை அடிப்படையாகக் கொள்ளல்.

1 புரோகரியோற்றா கல அமைப்புக்குரிய சயனோபற்றீரியா (Cyano-bacteria) மெய்பற்றீரியா (Eubacteria) கலங்களை உயர் தாவரக் கலங்களுடன் வேறுபடுத்துதல்.

2. புரோகரியோற்றாவின் பொதுமைப்படுத்திய கல அமைப்பு பற்றியறிதலும், கலக் கூறுகள் - தொழில் தொடர்பு பற்றி அறிதலும்.

- உயர் தாவரக் கலமொன்றின் அமைப்பு பற்றி அறிதல், கலக்கூறுகள் / புன்னங்கங்களின் தொழில் தொடர்புகளை அறிந்திருத்தல்.

-பச்சையவுருமணி, இழைமணி ஆகிய புன்னங்கங்களின் அமைப்பு பற்றி அறிந்திருத்தல் இரண்டிற்குமிடையிலுள்ள தொழில், கட்டமைப்பு தொடர்புகள் பற்றி அறிந்திருத்தல்.

உதாரணம்:- இழைமணி, பச்சையவுருமணி இரண்டும்;
1 தற்பகர்ப்படையும் தன்மை
2 தன்னகத்தே பரதந்தொகுப்பைக் கொண்டிருத்தல்
3. ATP உற்பத்தி மையங்களாகக் காணப்படுதல்
4. இரட்டை மென்சவ்வைக் கொண்டிருத்தல் போன்றன.

· நிறமூர்த்த அமைப்பு / நிறமூர்த்தத்தின் ஆக்கக் கூறுகள்.

(Modern Five Kingdom System)

A) Kingdom - Monera
B) Kingdom - Protista
C) Kingdom Fuugi
D) Kingdom Plantae
E) Kingdom Animalia

ஃ தாவர இராய்ச்சியத்தின் வெவ்வேறு பிரிவுகளை கருத்திற்கெடுத்து அவற்றின் இயல்புகளை அறிதல்

உதாரணம்:-

| | | | |
|---|---|---|---|
| Bryophyta | | | Embryo phyta |
| Pteridophyta | | Tracheo phyta | |
| Gymnosperm | Spematophyta | | |
| Angiesperm | | | |

ஃ பேதங்கள் / வர்க்கங்கள் இயற்கைமுறைப்பாகுபாட்டில் கொண்டுள்ள பங்கினை ஆராய்ந்தறிதல்

ஃ Virus பாகுபாட்டுக்குள் சேர்க்கப்படுவதற்கான - சேர்க்கப்படாமைக்கான காரணங்களை அறிதல்

ஃ குறிப்பிட்ட அங்கி ஒன்று இரு சொற் பெயரீட்டுக்கமைவாக எவ்வாறு காணப்படும் என்பதனை விளங்கிக்கொள்ளல்

உதாரணம்- அகத்தித் தாவரம் இருசொற்பெயரீட்டுக்கமைய பின்வருமாறு எழுதப்படும்
Sesbania grandiflora

(தொடரும்)

---

# பொருளியல் A/L

## பணவீக்கம் (INFLATION)

(சென்றவாரத்தொடர்ச்சி)

V

### கட்டுப்படுத்தும் வழிமுறைகள்

பணவீக்கத்தால் ஏற்படும் சாதகமான விளைவுகளை விட பாதகமான விளைவுகளே அதிகமாக இருப்பதனால் அதனைக் கட்டுப்படுத்த வேண்டியது அவசியமாகிறது எனினும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஓரளவான பணவீக்கம் அவசியமானதாகும். இதனைப் ''பொருளாதார வளர்ச்சியுடன இணைந்த பணவீக்கம்'' அல்லது ''தாங்கிக் கொள்ளக்கூடிய அளவான பணவீக்கம்'' என்பர். உதாரணமாக ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் வருடாந்தம் 5 % மாக அதிகரித்துச் செல்லும் போது அந்நாட்டில் 5 % அல்லது 6 % பணவீக்கத்தினை அனுமதிக்கலாம்; அதற்கு மேலான மட்டத்தில் அதிகரித்துச் செல்லும் பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்துதல் வேண்டும்.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு
1. உற்பத்திக்கொள்கை
2. நாணயக்கொள்கை
3. இறைக்கொள்கை
4. வருமான கொள்கை
5 விநியோகக்கொள்கை

என்பவற்றைக் கையாளலாம், அவற்றை ஒவ்வொன்றாக நோக்குவோம்.

### 1. உற்பத்திக்கொள்கை

பொருட்களது நிரம்பலிலும் பார்க்க அவற்றுக்கான கேள்வி அதிகமாக இருப்பதனாலேயே பணவீக்கம் தோன்றுகிறது. எனவே பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த

அ) பொருட்களது உற்பத்தியை அதிகரித்தல்

ஆ) பொருட்களுக்கான கேள்வியைக் குறைத்தல்

ஆகிய இரு வழிமுறைகள் உள்ளன. இவற்றில் உற்பத்தியை அதிகரிக்கச் செய்து பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதே உற்பத்திக் கொள்கையின் நோக்கமாகும். உள்நாட்டில் பல்வேறு ஊக்குவிப்புக்களை வழங்குவதன் மூலம் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதன் மூலம் பணவீக்கத்தைக் கட்டுபடுத்தலாம் இது சிறந்த வழிமுறையாகும் ஆனால் இதனை நடைமுறைப்படுத்த நீண்ட காலம் எடுக்கும் எனவே குறுங்காலத்தில் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு மக்களின் கொள்வனவு சக்தியைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

### 2 நாணயக்கொள்கை (Monetary Policy)

(பரீட்சை முக்கியத்துவம் கருதி சற்று விரிவாக நோக்கப்படுகிறது) ''மத்திய வங்கி நாட்டின் பண நிரம்பல், பணக்கிடைப்பனவுத் தன்மை வட்டி வீதம் என்பவற்றை மாற்றுவதன் மூலம் பொருளாதார நடத்தையினை மாற்றுவதற்கும் நாணய பெறுமதியை (உள்நாட்டு, வெளிநாட்டு) தளம்பலடையாது உறுதியாக வைத்திருப்பதற்கும் முயற்சியினை மேற்கொள்வது நாணயக்கொள்கையாகும்''

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தி விலைமட்ட உறுதிப்பாட்டைப் பேணுவது நாணயக்கொள்கையின் முக்கியமான நோக்கங்களில் ஒன்றாகும் நாணயக்கொள்கையினை அமுல் செய்வதற்கு மத்திய வங்கி இருவகையான கருவிகளை (சாதனங்ளை) கையாளுகின்றது.

---

வே. கருணாகரன்
(B. A. Hons Dip in Ed.)

---

### 1. மரபு வழி / சார - பரிய / தொகைக் / கணியக் கட்டுப்பாட்டுக் கருவிகள் (Quantity Control)

வணிக வங்கிகள் வழங்கும் கடன்களின் மொத்தத் தொகையினைக் குறைப்பதனை நோக்கமாகக் கொண்டு மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படும் கடன் கட்டுப்பாட்டு முறையே தொகைக் கடன் கட்டுப்பாட்டு முறையாகும். அதாவது ''வணிக வங்கிகள் எந்தெந்தத் துறைகளுக்கு என்ன நோக்கத்திற்கு எவ்வளவு கடன்களை வழங்குகிறது எந்த நிபந்தனைகளின் கீழ் வழங்குகிறது என்பதனை நோக்காது வணிக வங்கிகளினால் வழங்கப்படும் எல்லாத் துறைகளுக்கான கடன்களையும் குறைக்கத் தக்க வகையில் மத்திய வங்கி மேற்கொள்ளும் கடன் கட்டுப்பாட்டு முறையே தொகைக் கடன் கட்டுப்பாடு ஆகும்.''

மத்திய வங்கியினால் கையாளப்படுகின்ற தொகைக் கடன் கட்டுப்பாட்டுக் கருவிகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

(அ) சட்டப்படியான ஒதுக்கு வீதம்
(ஆ) வங்கி வீதம்
(இ) பகிரங்க திறந்த சந்தை நடவடிக்கை

### (அ) சட்டப்படியான ஒதுக்கு வீதம் / தேவை (Statutory Reserve Ratio / Requirement)

''வணிக வங்கிகள் தமது மொத்த வைப்புக்களில் ஒரு குறிப்பிட்ட வீதத்தினை சட்டப்படியாக மத்திய வங்கியிடம் ஒதுக்கி வைக்க வேண்டி இருப்பதே சட்டப்படியான ஒதுக்குத் தேவையாகும்''

இலங்கையில் நாணயச் சட்டத்தின்படி தவணை, சேமிப்பு வைப்புக்களுக்கு எதிராக 5% — 20% வரையும் கேள்வி வைப்புக்களுக்கு எதிராக 10% — 40% வரையும் ஒதுக்க வேண்டும். 1987 இல் ஒதுக்கு வீதம் ஒன்றிணைக்கப்பட்ட பின்னர் மொத்த வைப்புக்களில் 10% — 20% வரையில் மட்டுமே ஒதுக்கு வீதமாக உள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பொருளியல்

மத்திய வங்கி இச் சட்டப்படியான ஒதுக்கு வீதத்தை உயர்த்தும் போது வணிக வங்கிகள் முன்னரிலும் பார்க்கக் கூடிய தொகையினை மத்திய வங்கியிடம் ஒதுக்கி வைக்க வேண்டி நேரிடும். இதனால் வணிக வங்கியின் கையிருப்பில் உள்ள காசு குறைவடையும். இதனால் வணிக வங்கிகளின் கடன் வழங்கும் ஆற்றல் குறைவடைய அவை வழங்குகின்ற கடன்களின் அளவும் குறைவடையும் இந்நிலையில் மற்றவைகள் மாறாதிருக்கப் பணநிரம்பல் குறைவடையும்.

சட்டப்படியான ஒதுக்கு வீதத்துடன் பணப்பெருக்கி (Money Multiplier — பணநிரம்பலுக்கும் நாணயத் தளத்திற்கும் இடையிலான விகிதம்) எதிர் கணியத் தொடர்புடையது எனவே ஒதுக்கு வீதத்தின் அதிகரிப்பு கடன் பெருக்கியை வீழ்ச்சியடையச் செய்யும். எனவே பணநிரம்பல் குறையும். இவ்வகையில் ஒதுக்கு வீத மாற்றத்திற்கும் பணநிரம்பல் மாற்றத்திற்குமிடையில் எதிரான தொடர்பு காணப்படும்

எனவே ஒரு பொருளாதாரத்தில் பணநிரம்பலைக் குறைத்து பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த மத்திய வங்கி விரும்பும் போது சட்டப்படியான ஒதுக்கு வீதத்தை உயர்த்தும்.

(மறுபுறமாகவும் விளக்கம் பெறுக)

இந்தக் கருவியை மத்திய வங்கி பணநிரம்பலைக் கட்டுப்படுத்தப் பரந்தளவில் பயன்படுத்தியுள்ளது அண்மைக் காலத்தில் சட்டப்படியான ஒதுக்கு வீதம் சிறந்த நாணயக் கொள்கைக் கருவியாக செயற்பட முடியாமல் இருக்கிறது

ஃ (நாணய தளம்/ தள பணம்/ உயர் வலுப் பணம்/ ஒதுக்குப் பணம்)- Monetary Base/ Base Money/ High Powered Money/ Reserve Money.)

[MS = MB
MS — பணநிரம்பல்
B — தள பணம்
M — பணப் பெருக்கி]

## (ஆ) வங்கி வீதம் (Bank Rate)

இதுவும் மரபார்ந்த நாணயக் கொள்கைக்கருவிகளில் ஒன்றாகும். ''வணிக வங்கிகளின் இறுதிக் கடன் ஈவோன் (Lender of the Last Resort) என்ற அடிப்படையில் வழங்கும் கடனுக்கு மத்தியவங்கி அறவிடும் வட்டிவீதமே வங்கி வீதமாகும்''

இவ் வங்கி வீதத்தினை அடிப்படையாகக்கொண்டு வணிக வங்கிகள் தாம் வழங்குகின்ற கடன்களுக்கான வட்டி வீதங்களை நிர்ணயிக்கின்றன, (சந்தை வட்டி வீதம்) எனவே வங்கி வீதத்தில் ஏற்படும் மாற்றங்கள் வணிகவங்கிகளின் கடன்களின் மீதான வட்டி வீதத்தில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன.

மத்திய வங்கி, வங்கி வீதத்தினை உயர்த்தும்போது வணிக வங்கிகள் தாம் வழங்கும் கடன்களுக்கான வட்டிவீதங்களையும் உயர்த்துகின்றன இதனால் கடன்களுக்கான செலவு அதிகரிக்க கடன்களின்கேள்வி குறைகிறது. இதனால் வணிக வங்கிகள் வழங்குகின்ற கடன்களின் அளவு குறைகிறது. இந்நிலையில் மற்றவைகள் மாறாத நிலையில் நாட்டின் பணநிரம்பல் குறைவடைகின்றது இவ்வகையில் வங்கி வீத மாற்றத்திற்கும் பணநிரம்பல் மாற்றத்திற்குமிடையில் எதிரான தொடர்பு காணப்படும்

மேலும் மத்திய வங்கியிலிருந்து கடன் பெறுவது அதிக செலவை ஏற்படுத்துவதால் வணிக வங்கி அதனைக் கட்டுப்படுத்தும் போது நாணயத் தளம் சுருங்குகிறது. எனவே பணப் பெருக்குக்கேற்ப பணநிரம்பல் சுருங்குகிறது. வங்கி வீதத்திலுள்ள ஒரு பலவீனம் என்னவெனில் அது நாணயத்தளத்தை மறைமுகமாகவே தாக்குகிறது: எனவே விரும்பிய இலக்கை அடைய நீண்டகாலம் எடுக்கிறது.

வங்கி வீதம் செயற்திறமையான நாணயக் கொள்கைக் கருவியாக இலங்கையில் செயற்பட முடியாமல் இருப்பதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

i) வணிக வங்கிகள் மோசமான திரவத்தன்மையை அனுபவிக்கும் போது தான் வங்கிவீதம் திறமையாக செயற்படும் சாதாரண நிலைமைகளில் வணிக வங்கிகள் மத்திய வங்கியிலிருந்து கடன்பெறுவதை தவிர்த்துக் கொள்கின்றன. வங்கிகளுக்கிடையிலான கடன் வசதிகளை பெற்றுகொள்கின்றன

(ii) மத்திய வங்கியில் பல மீள் நிதிப்படுத்தல் வசதிகள் காணப்படுவதனாலும். இவற்றின் அ...

வணிக வங்கிகள் தாம் வைப்புச் செய்த உள் பணம் (Input Money) எனக் கொண்டு கடனாக்கம் செய்கின்றன. எனவே நாணயத் தளத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு பணப் பெருக்குக்கேற்ப (பண நிரம்பலுக்கும் நாணயத் தளத்திற்குமிடையிலான விகிதம்) பண நிரம்பலில் அதிகளவான அதிகரிப்பை ஏற்படுத்தும். பணநிரம்பல் அதிகரிப்பிற்கு ஏற்ப பொருள் நிரம்பல் அதிகரிக்காது விடின் பொது விலை மட்டம் உயர்ந்து பணவீக்கம் ஏற்படும்.

ஆரம்ப சந்தையில் கொள்வனவு செய்த அரசாங்க ஆவணங்களை மத்திய வங்கி பகிரங்கச் சந்தை நடவடிக்கை மூலம் இரண்டாந்தர சந்தையில் (Secondary Market விற்பனை செய்யுமானால் அரசிற்கான அதன் தேறிய கடன் வழங்கல் குறைவடையும். எனவே நாணயத் தளத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி பணப்பெருக்கிற்கு ஏற்ப அதிகளவால் பணநிரப்பலைக் குறைவடையச் செய்யும்.

(ii) மத்திய வங்கி ஆவணங்களைப் பொறுத்த வரை புதிய ஆவணங்கள் வெளியிடப்படும் போது அதன் ஏனைய பொறுப்புக்கள் அதிகரிக்கின்றன. இது அதனது தேறிய ஏனைய சொத்துக்களைக் குறைப்பதன் வாயிலாக நாணயத்தைக் குறைக்கின்றது. எனவே நாணயத் தளத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி பணப் பெருக்கிற்கு ஏற்ப அதிகளவால் பணநிரம்பலைக் குறைவடையச் செய்யும்.

மத்திய வங்கி ஆவணங்களை விற்பனை செய்யும் போது வணிக வங்கிகள் அவற்றைக் கொள்வனவு செய்யுமாயின் வணிக வங்கிகளின் கையிருப்பிலுள்ள காசு குறைவடையும். (நாணயத்தளம் வீழ்ச்சி) இதனால் கடன் வழங்கும் ஆற்றல் குறைவடைய வணிக வங்கிகள் வழங்குகின்ற கடன்களின் அளவு குறைவடைகின்றது இந்நிலையில் மற்றவைகள் மாறாதிருக்கும் போது பண நிரம்பல் குறைவடையும்.

எனவே ஒரு பொருளாதாரத்தில் பணநிரம்பலைக் குறைத்து, பண வீக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமென மத்திய வங்கி விரும்பும் போது பகிரங்கச் சந்தையில் ஆவணங்களை விற்பனை செய்யும் (இதற்கு மறுபுறமாகவும் விளக்கம் பெறுக)

## திறந்த சந்தை நடவடிக்கையிலுள்ள நன்மைகள்:

(A) இது சந்தை சார்பான கருவியாக அமைவதால் எவரையும் தெரிந்தெடுக்க வேண்டியதில்லை
(B) இது நாணயத்தளத்தை நேரடியாகவே தாக்குகிறது எனவே விரும்பிய விளைவை மிக விரைவாகவே பெறலாம்.
(C) இந்த நாணயக் கொள்கைக்கான செலவு சமமாகப் பங்கிடப்படுகிறது.
(D) இக்கொள்கையை அமுல்படுத்துவது இலகுவானது.

இதிலுள்ள குறைபாடுகள்:

(A) இது வெற்றியளிப்பதற்கு வளர்ச்சியடைந்த பணச்சந்தை இருப்பது அவசியமாகும்.
(B) மிகவும் மோசமான பணவீக்கம் உள்ள நிலையில் இது அதிகளவு பயன்பாடுடையதல்ல

இலங்கையில் 1979ஆம் ஆண்டுக்குப் பின்பு

(i) திறைசேரி உண்டியல்களை வெளியிடும் உச்ச வரம்பு உயர்த்தப்பட்டதாலும்
(ii) பணச்சந்தை விரிவடைந்ததாலும் பகிரங்கச் சந்தை நடவடிக்கை முக்கியமானதாக அமைகிறது. இந்நாட்டின் பிரதான நாணயக் கொள்கைக் கருவியாக திறந்த சந்தை நடவடிக்கைகள் விளங்கக் கூடிய சூழ்நிலைகள் தற்போது உருவாகியுள்ளன.

இலங்கை போன்ற வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் தொகைக் கட்டுப்பாடுகள் விரும்பப்படுவதில்லை அதற்கான காரணங்கள் வருமாறு;

(i) இலங்யையில் சேமிபுக் குறைவாக இருப்பதால் சொந்த முதலீடுகள் அதிகரிப்பதில்லை இதனால் கடன் மூலதனமே முக்கியமானது. மத்திய வங்கி எல்லாத் துறைகளுக்குமான கடன்களை குறைக்கும்போது முதலீடுகள் தடைப்படுகின்றன. இதனால் உற்பத்தியும், தொழில் வாய்ப்பும், ஏற்றுமதியும், மெய்வருமானமும் பாதிக்கப்படும். இதனால் பொருளாதார பின்னடைவு தோன்றும்
(ii) மத்திய வங்கி, வங்கி, வீதத்தை உயர்த்தும் போது வட்டி வீதங்கள் உயர்கின்றன. இத...

க்கடன் கட்டுப்பாடு ஆகும். '' தேவையில்லாத துறைகளுக்கான கடன்களைத் தடுத்தலும் தேவையான துறைகளுக்கான கடன்களை ஊக்குவித்தலுமே தெரிவுக்கடன் கட்டுப்பாட்டின் நோக்கமாகும்.

மத்தியவங்கியினால் கையாளப்படும் தெரிவுக் கடன் கட்டுப்பாட்டுக் கருவிகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்:

### (அ) எல்லை ஒதுக்குத் தேவை

ஒரு குறிக்கப்பட்ட துறைக்கு வணிகவங்கிகள் வழங்குகின்ற கடன்களுக்கு எதிராக ஒரு குறிக்கப்பட்ட வீதத்தினை மத்தியவங்கியில் ஒதுக்கி வைத்தல் வேண்டியிருப்பதே எல்லை ஒதுக்குத் தேவையாகும்.

### (ஆ) நாணயக் கடிதங்களுக்கெதிரான காசு எல்லை

மத்தியவங்கி நாணயக் கடிதங்கள் மூலம் நிதிப்படுத்தும் வெவ்வேறு கொடுப்பனவுகளுக்கு வெவ்வேறு காசு எல்லைகளைத் தீர்மானித்து வங்கிக் கடன்கள் சில உத்தேச நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுவதை தடைசெய்வதை இது குறிக்கின்றது.

### (இ) கடன் எல்லை தீர்மானித்தல்

ஒவ்வொரு கடனிலும் எந்தளவுக்கு இருக்க வேண்டும், எந்தக் காலப்பகுதியில் இருந்த மட்டத்திற்கு மேல் இருக்கக் கூடாது என்று தீர்மானித்தலை இது குறிக்கின்றது.

### (ஈ) வங்கிகளின் வட்டிவீதத்தினைக் கட்டுப்படுத்தல்

வணிகவங்கிகளின் கடன்களுக்கென வட்டிவீதத்தின் மீது நேரடியாக செல்வாக்குச் செலுத்தி வட்டி வீதத்தினை உயர்த்திக் கடன்களைக் கட்டுப்படுத்தல் அத்தியாவசியமற்ற துறைகளுக்கான கடன்களின் வட்டிவீதத்தினை உயர்த்தியும், வளர்ச்சித்துறைக்கான வட்டியினைக் குறைத்தும் செயற்படுத்தலாம்,

### உ) நல்வழிப்படுத்தல்

இதற்குச் சட்ட ரீதியான அதிகாரம் எதுவும் கிடையாது. எனினும் மத்திய வங்கிக்கும், வணிக வங்கிக்கும் இடையே நல்லுறவு காணப்படுவதனால் மத்திய வங்கியின் அறிவுறுத்தல்களை அவை ஏற்று நடக்கின்றன. தேசிய கடன் திட்டத்தினைச் செயற்படுத்துவதில் இந்த வழி பெருமளவுக்குப் பயன்படுத்தப்படுகிற . இதன்மூலம் முன்னுரிமைத் துறைகளுக்குக் கடன் வழங்க முடிகிறது.

தெரிவுக்கடன் கட்டுப்பாடுகள் தொடர்ந்து நீடித்து நிலைக்குமாயின் பின்வரும் நிலைமைகளுக்கு இட்டுச் செல்லும்:

அ) தவறான சாதன ஒதுக்கீடு. கட்டுப்பாடு இல்லாத துறைகளை நோக்கி வள ஒதுக்கீட்டை மேற்கொள்ளத் தூண்டுதலாக அமையும்
ஆ) வங்கித் தொழில் மிகவும் செலவுடைய துறையாக விளங்குவதால் நிதி சம்பந்தமான முடங்கல் நிலைமை ஏற்படுத்தும்
இ) மத்திய வங்கி அமுல்படுத்துவதற்கு உயர்ந்த நிருவாகச்செலவு ஏற்படுகிறது இந்தச்செலவு ஒரு சமுதாயத்திற்குரிய இழப்பீடாக அமைகிறது

எனவேதான் இவை தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படுவதில்லை.

## 3. இறைக்கொள்கை (Fiscal Policy)

அரசாங்க வரவு-செலவுத் திட்டத்தினூடாக வருமானம், செலவு, நிதியீட்டம் ஆகியவற்றில் மாற்றங்களை ஏற்படுத்துவதன்மூலம் பண விரிவுத் தாக்கம், நாணய மாற்றுவீதம் என்பவற்றைக் கட்டுப்படுத்தி பண வீக்கத்தைக் கட்டுப்படுத்த இறைக்கொள்கை பயன்படுகிறது

உள்நாட்டின் மொத்தக் கேள்வியைக் கட்டுப்படுத்துவதன் மூலம் பொருளாதாரத்தின் உள்ளார்ந்த, வெளிவாரிய சமநிலையை உருவாக்குவதற்கும், நீண்ட காலத்தில் பொருளாதார நிரம்பல் துறை...

மொத்தக் கேள்வியில் ஏற்படும் குறைவு விலை மட்டத்தைக் குறைக்க வழிசெய்யும்

எனினும் எல்லா நிலமைகளிலும் செலவுகளைக் குறைக்க முடியாது. பாரிய செயல் திட்டங்களை இடைநிறுத்தின் நீண்ட காலத்தில் பொருளாதாரத்தில் தேக்கநிலை உருவாகலாம்,

வரவு -செலவுத்திட்டப் பற்றாக் குறைகளைக் குறைப்பதோடு நிதியீட்டம்செய்யும்போதுவிரிவுத்தாக்கம் ஏற்படுத்தாத மூலங்களினூடாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

அ) வெளிநாட்டு நிதி பெறப்படும் போது பண்ட வடிவில் பெறப்படுவது அவசியம். இதன் மூலம் பணநிரம்பல் அதிகரிக்காது, பொருள் நிரம்பலை அதிகரிப்பதன் மூலம் விலைஉயர்வினைக் கட்டுப்படுத்தலாம்.

ஆ) உள்நாட்டில் சந்தையல்லாக் கடன்களையும், சந்தைக்கடனில் வங்கியல்லாத்துறையிலிருந்தும் கடன் பெறுவதன் மூலம் பணநிரம்பலில் அதிகரிப்பு ஏற்படாமல் தவிர்க்க முடியும். உள்நாட்டில் இவ்வாறு பெறப்படும் கடன் மக்களின் செலவழிக்கத்தக்க வருமானத்தைக்குறைவடையச் செய்து மொத்தக் கேள்வியைக் குறைப்பதன் மூலமும் விலை உயர்வைக் கட்டுப்படுத்த உதவும்.

## 4 வருமானக் கொள்கை

அரசாங்கம் உற்பத்தித் திறனற்ற துறைகளுக்கு சம்பள அதிகரிப்பை வழங்குவதைக் குறைத்துக் கொள்ள வேண்டும் உற்பத்தி அதிகரிக்காத காலங்களில் சம்பள அதிகரிப்பை வழங்கக் கூடாது! இதன் மூலம் கூலித்தூண்டல் பணவீக்கத்தைத் தவிர்க்கலாம்.

## 5. விநியோகக் கொள்கை

அத்தியாவசிய பண்டங்களை நியாயவிலையில் சமபங்கீட்டு முறையில் விநியோகித்தல் வேண்டும்.

விலைக்கட்டுப்பாடுகளை (Price Controls) அமுல்படுத்துவது பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் நேரடி நடவடிக்கையாக இருப்பினும் அது அமுக்கிய பணவீக்க நிலையினை உருவாக்கும்,

தேவையான போது அத்தியாவசிய பண்டங்களுக்கு மானியம் வழங்குவதன் மூலம் விலைகளைக் கட்டுப்படுத்தலாம்,

## முடிவுரை

இவ்வாறு பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு வழிமுறைகள் இருப்பினும், பணவீக்கத்திற்கான சரியான காரணங்களைக் கண்டறிந்து, அதற்கேற்ப முரண்பாடற்ற, நடைமுறைச்சாத்தியமான வழிமுறை ஒன்றையோ அல்லது பலவற்றை ஒருங்கிணைத்தோ செயல்படுத்துவதன் மூலம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தி பேரண்டப் பொருளியல் இலக்குகளை அடைந்து கொள்ள முடியும்,

(முற்றும்)

---

## விஞ்ஞானபாட மாதிரி வினாக்கான்-பகுதி I [illegible] விடைகள்

கடந்த வாரம் மாணவர் அரங்கில் வெளியான க.பொ.த சாதாரணதர விஞ்ஞான பாடத்தின்

வணிக வங்கிகள் மத்திய வங்கியிலிருந்து கடன்பெறுவதை தவிர்த்துக் கொள்கின்றன. வங்கிகளுக்கிடையிலான கடன் வசதிகளை பெற்றுகொள்கின்றன

(ii) மத்திய வங்கியில் பல மீள் நிதிப்படுத்தல் வசதிகள் காணப்படுவதனாலும் இவற்றின் வட்டி வீதம் வங்கி வீதத்தினை விட வெகு குறைவாகக் காணப்படுவதனாலும் வணிக வங்கிகள் இந்தக் கடன்பெறு மூலத்தினை நாடுகின்றன

இக்காரணங்களினால் சந்தை வட்டி வீதம் வங்கி வீத மாற்றங்களுக்கேற்ப போதிய மாற்றங்களுக்குட்படவில்லை எனவே இக் கருவி செயத்திறன் வாய்ந்ததாக அமையவில்லை

## (இ) திறந்த சந்தை நடவடிக்கை (Open Market Operation - O. M. O)

''நாட்டின் பண நிரம்பலை ஒருங்குபடுத்துவதற்காகவும் அரசிற்கான நிதியைத் திரட்டிக் கொடுப்பதற்காகவும் மத்திய வங்கி பகிரங்கச் சந்தையில் ஆவணங்களைக் கொள்வனவு, விற்பனை செய்கின்ற நடவடிக்கையே திறந்த சந்தை நடவடிக்கையாகும்''

இலங்கை மத்திய வங்கி திறந்த சந்தை நடவடிக்கையில் 2 வகையான ஆவணங்களைப் பயன்படுத்துகிறது.

i) அரசாங்க ஆவணங்கள்

ii) மத்தியவங்கி ஆவணங்கள்

i) அரச ஆவணங்களைப் பொறுத்தவரை அரசாங்கத்திற்குத் தேவையான கடன் நிதியைப் பெற்றுக் கொடுப்பதற்காக மத்திய வங்கி ஆரம்ப சந்தையில் (Primary Market) கொள்வனவு செய்யுமாயின் அரசிற்கான தேறிய கடன் வழங்கல் அதிகரிப்பதனால் நாணயத் தளம் விரிவடைகின்றது இதனை

பும், ஏற்றுமதியும், மெய்வருமானமும் பாதிக்கப்படும். இதனால் பொருளாதார பின்னடைவு தோன்றும்

(ii) மத்திய வங்கி, வங்கி, வீதத்தை உயர்த்தும் போது வட்டி வீதங்கள் உயர்கின்றன. இதனால் தொழில் துறையினருக்கான நிதிச்செலவும் கூடுகின்றது. எனவே விலைகளை உயர்த்துவர். எல்லாத் துறைகளிலும் இவ்வாறு நிகழ்வதால் பணவீக்கம் தோன்றும். எனவே தொகைக் கட்டுப்பாடுகள் விரும்பப்படுவதில்லை.

## II நேரடி / மரபுவழியற்ற / பாரம்பரிய மற்ற /பண்பு/ தெரிந்தெடுக்கப்பட்ட கட்டுப்பாட்டுக்கருவிகள் (Direct Quality Contr ols)

இலங்கை போன்ற வளர்ச்சியடைந்துவரும் பொருளாதாரங்களில் தொகைக் கட்டுப்பாடுகள் விரும்பப்படுவதில்லை ஏனெனில் வணிக வங்கிகளைக் கட்டுப்படுத்துவதற்கு மத்தியவங்கி தொகைக் கட்டுப்பாட்டுக்கருவிகளைக் கையாளும் போது வணிகவங்கிகள் வழங்குகின்ற எல்லாத் துறைகளுக்குமான கடன்களும் பாதிக்கப்படுகின்றன. இதனால் வணிகவங்கிகளின் கடன்களைத் தெரிந்தெடுத்து மத்தியவங்கி கட்டுப்படுத்த வேண்டும் எனக் கூறப்படுகின்றது '' வணிக வங்கிகள் எந்தெந்தத் துறைகளுக்கு, என்ன நோக்கங்களிற்கு எவ்வளவு கடன்களை வழங்குகின்றன, என்ன நிபந்தனைகளின் கீழ் அக்கடன்கள் வழங்கப்படுகின்றன என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு வணிகவங்கிகளின் கடன்களைத் தெரிந்தெடுத்து வெவ்வேறு அளவுகளில் கட்டுப்படுத்துவதே தெரிவு

பயன்படுகிறது

உள்நாட்டின் மொத்தக் கேள்வியைக் கட்டுப்படுத்துவதன் மூலம் பொருளாதாரத்தின் உள்ளார்ந்த, வெளிவாரியான சமநிலையை உருவாக்குவதற்கும், நீண்டகாலத்தில் பொருளாதார நிரம்பல் துறைகளை தூண்டுவதன் மூலம் பொருளாதார உறுதியை ஏற்படுத்துவதற்கும் இக் கொள்கை உதவுகிறது

இலங்கையில் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட பணச் சந்தை வளர்ச்சியடைந்திருப்பின் நாணயக் கொள்கைகள் மூலம் பொருளாதார அபிவிருத்தியைத் தூண்ட முடியும் தனியார் துறையும் நன்கு வளர்ச்சி பெற்றிருக்கவில்லை இத்தகைய நிலைகள் இறைக் கொள்கையின் முக்கியத்துவத்தை அதிகரிக்கச் செய்துள்ளன.

அரசாங்கம் வரி அமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தலாம் அ) நேரில் வரிகளின் (இறக்குமதி வரி உட்பட) அளவைக் குறைப்பதன் மூலம் பொருட்களின் விலைகளைக் குறைக்கலாம் ஆ மேலும் நேர்வரிகளை அதிகரித்து மக்களின் செலவழிக்கத்தக்க வருமானங்களைக் குறைத்து பொருட்களின் விலைகளைக் குறைவடையச் செய்யலாம்

அரசாங்க செலவினங்களைக் குறைத்தால் மொத்தக்கேள்வியில் குறைப்பினை ஏற்படுத்தலாம். வரவு செலவுத்திட்டரீதியில் நடப்புக் கை மாற்றல்களைப் பெற்றுக்கொள்ளும் அரசாங்க கூட்டுத்தாபனங்களின் உடைமை அமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தி அரசாங்க செலவினங்களைக் குறைத்தல்; சில நிறுவனங்களை தனியார் மயப்படுத்தல்: சிலவற்றை மூடுதல் மூலமும் செலவினைக் குறைக்கலாம் இதன் மூலம்

கடந்த வாரம் மாணவர் அரங்கில் வெளியான க.பொ.த சாதாரணதர விஞ்ஞான பாடத்தின் மாதிரி வினாக்களுக்கான விடைகள் கீழே தரப்படுகிறது.

| வினா இல | | விடை இல | வினா இல | | விடை இல |
|---|---|---|---|---|---|
| 1 | - | 3 | 19 | - | 3 |
| 2 | - | 3 | 20 | - | 1 |
| 3 | - | 3 | 21 | - | 4 |
| 4 | - | 4 | 22 | - | 3 |
| 5 | - | 2 | 23 | - | 3 |
| 6 | - | 2 | 24 | - | 2 |
| 7 | - | 2 | 25 | - | 3 |
| 8 | - | 2 | 26 | - | 2 |
| 9 | - | 4 | 27 | - | 2 |
| 10 | - | 2 | 28 | - | 2 |
| 11 | - | 1 | 29 | - | 3 |
| 12 | - | 4 | 30 | - | 4 |
| 13 | - | 2 | 31 | - | 4 |
| 14 | - | 2 | 32 | - | 2 |
| 15 | - | 3 | 33 | - | 1 |
| 16 | - | 3 | 34 | - | 2 |
| 17 | - | 2 | 35 | - | 2 |
| 18 | - | 2 | | | |

# தடைசெய்யப்பட்ட பொருள் எடுத்துவந்தவர்மீது வழக்கு

(நமது நிருபர்)

வடமாகாணத்திற்குள்ளே தடைசெய்யப்பட்ட பொருள்களை எடுத்துச்செல்ல எத்தனித்ததாக வேலணையைச் சேர்ந்த இராசரட்ணம் என்பவர் மீது வவுனியா பொலிசார் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

திருகோணமலை உயர் நீதிமன்றத்தில் வவுனியா பொலிசார் வழக்குத் தாக்கல் செய்ததை அடுத்து நீதிமன்றம் எதிரிக்கு அழைப்பாணை ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. இவ் அழைப்பாணை வேலணை கிராம சேவகருக்கே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதில் எதிர்வரும் 23-ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும்படி குறிப்பிடப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா காலத்தில் கிராம சேவையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த இவ் அதிகாரம் நீக்கப்பட்டிருந்தது ஆனால் தற்போது இக்கட்டளை அனுப்பி வைக்கப்பட்டமை ஆச்சரியம் தருவதாக உள்ளது என கிராமசேவையாளர் வட்டாரங்கள் தெரிவித்தன.

## சுட்டுக்கொலை

தீவகப் பகுதியிலுள்ள இராணுவத்தினரால் ஊர்காவற்றுறை பகுதியில் ஐம்பது வயதிற்கு மேற்பட்ட வயோதிபர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பதாக தெரிய வருகின்றது இவர் புளியங்கூடல் பகுதியை சேர்ந்தவர் எனவும் கூறப்படுகிறது.

# யாழ். நகர வீதிகளை புனரமைக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபைஎல்லைக்குட்பட்ட பகுதிகளில் யாழ் மாநகரசபையினால் புனரமைப்பு செய்யப்படுகின்ற வீதிகள் இம்மாதத்தில் புனரமைப்பு செய்யப்படவுள்ளதாக தெரிய வருகின்றது.

இதற்கென முதற்கட்டமாக கொழும்பில் இருந்து எடுத்து வரப்படுகின்ற சுமார் 300 பரல் தார் வந்து சேர்ந்ததும் இதற்கான வேலைகளைஉடன் ஆரம்பிக்க யாழ் மாநகரசபை திட்டமிட்டுள்ளது.

மேலும் இவ்வருடத்திற்கு 900 பரல் தார் ஒவ்வொரு தடவையும் 300 என கட்டம் கட்டமாக கொழும்பில் இருந்து எடுத்துவர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

அத்துடன் இதற்கான அனுமதியையும் ஒழுங்குகளையும் யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் தமக்குப் பெற்றுத்தந்துள்ளதாக யாழ். மாநகரசபை ஆணையாளர் தெரிவித்தார். (பா)

# செப்டிசீமியா நோயினால் மேலும் இருவர் மரணம்

யாழ் குடாநாட்டில் 'செப்டிசீமியா' கண்ட நிலையில் பலர் பாதிப்படைந்துள்ளனர். சமீபகாலத்தில் பலர் இதனால் உயிரிழந்துள்ளனர். நேற்று இளம் பெண் ஒருவரும் குழந்தை ஒன்றும் இதனால் யாழ். வைத்தியசாலையில் பலியானார்கள்

பல்வேறு தரப்பட்ட நோய்களினால் இரத்தம் நஞ்சூட்டகப்பட்டு 'செப்டிசீமியா'வாக மாறும் நிலை தொடருகிறது என்று தெரிவிக்கப்பட்டது,

கடந்த மூன்று மாதங்களில் மட்டும் செப்டிசீமியா நிலை கண்டு நூற்றுக்கும் அதிகமானோர் பலியாகியுள்ளனர்,

குடாநாட்டின் பல பகுதிகளிலும் இதன் தாக்கம் அதிகரித்திருப்பதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன,

திருச்செல்வம் கோமதி(18) என்றஇளம் பெண்ணும் குகன் சர்மிளா என்ற மூன்று மாதக் குழந்தையுமே நேற்று வைத்தியசாலையில் இறந்துள்ளனர், இவர்கள் பருத்தித்துறையைச் சேர்ந்தவர்கள்,

இதை உடன் கட்டுப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது, அல்லாவிடில் பலர் இதற்கு பலியாக வேண்டிய நிலை ஏற்படும். (தி,பா)

நிந்தனைக்கு

அன்போ, பகையோ இல்லாது உணர்வின்படி அல்லாது உசிதப்படி நடப்பவர்களே அரசியல்வாதிகள்
—செஸ்ட்டர்பீல்ட் பிரபு


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 02-05-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05


## கூரேயின் வெளியேற்றம்

ஐக்கியதேசியக் கட்சியின் உடைவு தவிர்க்கமுடியாத தொன்றாக மாறிவிட்டது. சிறிசேன கூரே தமது கட்சி செயலாளர் பதவியை இராஜினாமாச் செய்ய எடுத்த முடிவின் வெளிப்பாடு இதுவே ஆகும். இதேசமயம் திரு. கூரே அமைச்சர் பதவியிலும், பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலும் நீடிப்பார் எனத் தெரிவிக்கப் படினும், பெரும்பாலும் இது சாத்தியப்படமாட்டாது என்றே கூறலாம். இதில் கூரேக்கும் நம்பிக்கை இல்லை என்பதாலே கொழும்பு மாநகரசபைப் பகுதிக்குள் இருக்கும் தனது இரு வீட்டையும் அவர் விற்க முற்படுவதில் இருந்தே புரிந்து கொள்ள முடியும்.

திரு. கூரேயின் பதவிவிலகலானது, அவரின் சுயமான முடிவு என்பதைவிட நிர்ப்பந்தத்தின் அடிப்படையிலானதாகும். அதாவது ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் காலக்கெடுவுடன் கூடிய கட்டாயத்தின் பேரிலான பதவிவிலகலாகும். இந்நிலையானது, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களுடன் கட்சித் தலைமையின் அதிகாரமும் சேர்ந்து இருப்பின், அது எத்தனை தூரம் தாக்கங்கள் கூடியது என்பதை உணர்த்தக் கூடியதாகும்.

இதற்கு ஏற்றால் போல், கூரேயின் பின்நின்ற பலர் தற்பொழுது அவரைக் கைவிட்டுவிட்டதாகவே தெரிகின்றது. முக்கியமாக பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவின் நடவடிக்கைகளைக் கூறலாம். சிறிசேன கூரேயை ஆரம்பத்தில் ஆதரித்த அவர் இறுதியான நெருக்கடி நேரத்தில் கைவிட்டும் விட்டார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கைவிட்டமையானது முன்னைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஆலோசனையின் பெயரில் இடம் பெற்றதாகத் தெரிகின்றது.

ஆனால், ஐ. தே. க. வின் செயலாளர் பதவியில் இருந்து கூரே விலகுவதினால், கட்சிக்கு எவ்வாறான பாதிப்புக்கள் ஏற்படும் என்று தற்பொழுது திட்டவட்டமாகக் கூறமுடியாது. ஏனெனில் கூரே பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியைப் பார்க்கும் போது கூரேயின் பின்னால் ஒரு [illegible] ம் என எதிர்பார்க்க முடியாது உள்ளது. [illegible] கூரேயின் வெளியேற்றம் ஐ. தே. க. வில் பாரிய பிளவுகள் எதையும் ஏற்படுத்துமா என்பது தற்போதைக்கு கேள்விக்குரியதொன்றே.

இதேசமயம் கூரேயின் வெளியேற்றமும், அவரது

# இலங்கை இனப்பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினையே

## அரசே தீர்க்க வேண்டும் என்கிறார் ஜேர்மனி அமைச்சர்

(கொழும்பு)

ஜேர்மனியில் உள்ள 60 இலட்சம் வெளிநாட்டவர்களில் 20 இலட்சம் பேர் அகதிகளாக அந்நாட்டுக்கு வந்தவர்கள். இவர்களில் 95 சதவீதமானவர்கள் பொருளாதார அகதிகள். இலங்கையர் பலரும் இதில் அடங்குவர். ஆனால் இவர்களால் பாரிய பிரச்சினைகள் எதையும் தாம் எதிர்கொள்ளவில்லை என ஜேர்மனியின் பொருளாதார கூட்டுறவுக்கான அமைச்சர் வைஹாட் ஹார்ட் தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள அமைச்சர் ஹோட்டல் லங்கா ஒபரேயில் செய்தியாளர்களிடையே பேசினார். ஜேர்மனியில் வெளிநாட்டவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டபோதும்கூட நிலைமை கட்டுப்பாட்டிற்குள்ளேயே இருக்கிறது. நாசி தீவிரவாதிகள் தாம் நினைப்பது போல் செயற்பட அனுமதிக்கப்படமாட்டார்கள்.

இலங்கையில் மனித உரிமைகள் திருப்திகரமாக உள்ளன. இனப்பிரச்சினையைப் பெறுத்த வரையில் இது ஒரு உள்நாட்டுப் பிரச்சினையாகும். எனவே உள்நாட்டு முயற்சிகளூடாகவே இப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும். இதற்கான தீர்வு முயற்சிகளையும் இலங்கை அரசே மேற்கொள்ள வேண்டும்.

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகள் ஒருவித குழப்ப நிலைமையை தோற்றுவித்தது, இவ்வாறான குழப்ப நிலைமை தொடர்ந்தால் பொருளாதார அபிவிருத்தி தொடரமுடியாத நிலை ஏற்படும். கடந்த வருடத்தில் 90,000 ஜேர்மனியர் உல்லாசப் பயணிகளாக இலங்கை வந்துள்ளனர் எனவும் ஜேர்மனி அமைச்சர் தெரிவித்தார்.

## இலங்கையர் எவரையும் பிரான்ஸ்நாடுகடத்தவில்லை

பிரான்சிலிருந்து எவரையும் இலங்கைக்கு கட்டாயப்படுத்தி பிரான்ஸ் அரசாங்கம் அனுப்பவில்லை.

சட்டவிரோதமாக நடமாடிய ஒரு சிலரையே இலங்கைக்கு திருப்பி அனுப்பியதாக இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ஜே எம். வன்சோவிக் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸில் பல ஆயிரம் இலங்கையர்கள் உள்ளனர் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

## விமான நோட்டம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்குக் கடலோரப் பகுதிக்கு மேலாக கடந்த சில தினங்களாக காலையும், மாலையும் விமானம் பறந்து நோட்டமிட்டு வருகின்றது. (36)

## மகிழடித்தீவு வைத்தியசாலை படைமுகாமாக்க முயற்சி

(மட்டக்களப்பு)

கொக்கட்டிச்சோலை மகிழடித்தீவு வைத்தியசாலை கட்டடத்தை விசேட அதிரடிப் படை முகமாக மாற்றும் முயற்சியைநிறுத்தும்படி இப்பகுதி பிரமுகர்கள் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவைக் கோரியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவம் வெளியேறுகின்ற பகுதிகளைத் தற்போது விசேட அதிரடிப்படையினர் பொறுப்பேற்று வருகின்றனர் மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்கு பகுதியான படுவான் கரைப் பகுதியில் 1990ஆம் ஆண்டு ஜூன் மாத வன்செயல்களை தொடர்ந்து வைத்திய சேவைகள் முற்றாக சீரழிந்துள்ளன. இப்பகுதி மக்கள் தமது அன்றாட வைத்திய தேவைகளுக்கு பல மைல் கடந்து மட்டக்களப்பு வைத்திய சாலையில் சிகிச்சை பெற வேண்டிய நிலை காணப்படுகிறது.

## சூதாடிய குற்றத்திற்காக பெண் உட்பட நால்வர் கைது

(வடமராட்சி)

சூதாடிய குற்றத்திற்காக குடும்பப் பெண் ஒருவருக்கு பருத்தித்துறை தமிழீழ நீதிமன்றில் இரண்டாயிரம் ரூபா இழப்பீடு செலுத்துமாறு நீதியாளர் பிரதீபா தீர்ப்புக் கூறினார்

இப்பெண்ணின் கணவர் உட்பட மூவர் நாகர் கோயில் இடம்பெயர்ந்தோர் முகாம் ஒன்றில் சூதாடிக் கொண்டிருந்த போது நாகர் கோயில் காவல்துறையினர் கையும் மெய்யுமாகப் பிடித்து கைது செய்துநீதிமன்றில் ஆஜர்செய்தனர்,

சூதாட்டத்தில் ஈடுபட்ட மற்றைய இரண்டு பேருக்கும் தலா ஆயிரம் ரூபா குற்றமும் ஒரு மாத சிறையும் விதிக்கப்பட்டது.

செல்லத்துரை - துரைநாயகம், குணரத்தினம் - ஜெயசீலன், ஜெயசீலன் - சர்மிளா ஆகியோரே சூதாடி காவல் துறையினரால் கைதுசெய்யப்பட்டவர்களாவர். (யோ)

## சூழல் பாது. அலுவலகம் மணற்காட்டில் திறப்பு

கடந்த திங்கட்கிழமை காலை 9 30 மணியளவில் மணற்காட்டில் சூழல் பாதுகாப்பு நிறுவனத்தின் புதிய அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது

இந்நிகழ்ச்சியினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவனத்தின் பணிப்பாளர் மங்களவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார் தமிழீழவிடுதலைப் புலிகளின் அரசியல்துறை நடுவப் பணியகத்தைச் சேர்ந்த திரு. அரசண்ணா அவர்கள் பெயர்ப்பலகையினைத் திரை நீக்கம் செய்து வைக்க நிதர்சனப் பொறுப்பாளர் திரு: ஜவான் அவர்களால் புதிய அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது

இந்நிகழ்ச்சியினைத் தலைமையேற்று நடத்திய தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சூழல் பாதுகாப்புப் பகுதி பொது முகாமையாளர் அங்கு உரையாற்றுகையில் இந்நிறுவனம் தனியே மணற்காட்டின் சூழலைப் பாதுகாப்பதற்காக ஆரம்பிக்கப்படவில்லை இது தமிழீழத்தின் சூழலைப்பாதுகாப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ளது பல்வேறு நிறுவனங்களின் பங்களிப்போடு இச்சூழல் பாதுகாப்பு நிறுவனம் தமிழீழத்தின் எதிர்காலச் செல்வங்களை ஒரு மாசற்ற சூழலில் வாழ வழிவகுக்கும் என தாம் நம்புவதாகத் தெரிவித்தார்

இந்நிகழ்வில் அப் பகுதியைச் சார்ந்த பொது மக்களும் நிறுவன தொழிலாளர்களும் மற்றும் அரசியல் துறையினரும் கலந்து கொண்டனர்

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994.05.02 திங்கள் இரவு

08.01 - மேதினநாள் நிகழ்ச்சிகளின் தொகுப்பு
08.30 - செய்திகள்
08 40 - தரிசனம் - மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் அவர்களுடனான செவ்வி

1994.05.03 செவ்வாய் காலை

07.02 - மாவீர வணக்கம்
07.15 - இன்றைய தாரகை
07 30 - செய்திகள்
07 35 - பத்திரிகைச் செய்திகள்
07 40 - தாயகப் பாடல்கள்

# றுவாண்டா கிளர்ச்சியாளரிடம் கிழக்கு எல்லை வீழ்ச்சி

## அகதிகள் வெளியேறல் தடுப்பு

தன்சானியாவுடனான றுவாண்டாவின் கிழக்கு எல்லையைறுவாண்டாவின் டுட்சி சிறுபான்மையின கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றி மூடிவிட்டனர் இதனையடுத்து இவ்

அகதிமுகாம்களில் வந்து குவிந்த றுவாண்டா அகதிகளினால் பெரும் சுகாதார சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளதாகவும் பராமரிக்கக்கூடிய தொகையிலும்பன்மடங்கு தொகை

உதவியை இதுகுறித்து கோரியுள்ளது

இதேசமயம் சிறுபான்மை டுட்சி இன கிளர்ச்சியாளர்கள் நாட்டின் வடக்கு - கிழக்குப் பகுதிகளைமுழுமையாக தமது

## தினகரன் ஆசிரியருக்கு ஒரு வார சிறைத்தண்டனை

(சென்னை)

சென்னையிலிருந்து வெளியிடப்படும் 'தினகரன்' நாளிதழின் ஆசிரியர் முத்துப்பாண்டியனுக்கு ஒருவார சிறைத் தண்டனையை மாநில சட்டசபை விதித்துள்ளது.

இப் பத்திரிகை சட்டசபையின் சிறப்புரிமைகளை கடந்த ஆண்டில் வெளியான இரு செய்திகள் மூலம் மீறி

பேரவை இத் தீர்ப்மை வழங்கியுள்ளது

இந்த சிறப்புரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்த சிறப்புரிமை விசாரணைக் குழு சபையில் செய்த சிபார்சுகளின் அடிப்படையில் இத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட செய்திகள் தொடர்பாக பத்திரிகை ஆசிரியர்

ஐ. தே. க. வில் [illegible]
என்பது தற்போதைக்கு கேள்விக்குரியதொன்றே.

இதேசமயம் கூரேயின் வெளியேற்றமும், அவரது எதிர்கால நடவடிக்கையும் எதிர்காலத் தேர்தல்களில், குறிப்பாக மேல் மாகாணத்தில் தாக்கத்தைவிளைவிக்கும் என்றே எதிர்பார்க்கலாம். அதிலும் தற்பொழுது மேல் மாகாணசபை ஆட்சியை இழந்துள்ள நிலையில் மேல் மாகாணத்தில் கட்சியை வெகுவாகப் பாதிக்க கூடியதாக இருக்கும். ஏனெனில் கூரே மேல் மாகாணத்தில் கணிசமான மக்கள் செல்வாக்குக் கொண்டவராகும்.

ஆனால் டி. பி. விஜேதுங்காவைப் பொறுத்து கூரேயின் வெளியேற்றமானது சில நெருக்கடிகளைத் தீர்க்கும் என்பதில் சந்தேகமில்லை. இதில், முக்கியமாக காமினி திசாநாயக்காவைபாராளுமன்றஉறுப்பினராக்கி அமைச்சராக்கும் முயற்சிகளுக்கு தடையேதும் தற்பொழுது இருப்பதாக இல்லை,

அத்தோடு டி. பி. விஜேதுங்காவின் மற்றுமொரு குறிக்கோளும் இதன் மூலம் அடையப்படக்கூடும்; அதாவது ஐ. தே. க, விற்குள் உள்ள பிரேமா அணியினரைப் பலவீனப் படுத்தும் முயற்சிக்கும் இது உதவக் கூடும். தென் மாகாணசபைத் தேர்தலில் பிரேமதாசாவின் கொள்கைகள் புறக்கணிக்கப்பட்டதாகஎழுந்த குற்றச்சாட்டுகளை தொடர்ந்து டி. பி: விஜேதுங்கா பிரேமதாசா கொள்கைகள் பற்றியும், பிரேமதாசாவின் செயற்பாடுகள் பற்றியும் புகழ்ந்து பேசத் தொடங்கியுள்ளார்; மேலும் பிரேமதாசாவின் குடும்பத்தினரையும் நேரில் சென்று சந்தித்துப் பேசியுள்ளார். இது ஒரு தேர்தல்யுக்தி எனச் சகலருக்குமே தெரியும்' இருப்பினும் பிரேமதாசா அணி இவற்றால் பயன் பெற்றுவிடக் கூடாது என்பதில் அவர் அக்கறையாகவுள்ளார். இதன் காரணமாகவே பிரேமதாசா குடும்பத்தை அணைக்க முற்படுவதுபோல் காட்டிக் கொண்டு அவரின் நண்பரின் கழுத்தை அறுப்பதில் டி. பி, தீவிரமாகச் செயற்பட்டுள்ளார்.

இந் நிலையானது சிறிசேன கூரேயின் வெளியேற்றத்தினால் ஐ.தே கவில் டி பி. தனது நிலையை உறுதிப் படுத்தியுள்ளதாகவே தெரிகின்றது, இதே சமயம் பிரேமதாசாஅணி ஐ.தே.கவில் பலவீனப்படுத்தப்பட்டுள்ளது. இதன் பின்னணியில் டி. பி. வீஜேதுங்கா மட்டுமல்ல முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா உள்ளார் என்பதே நிதர்சனமாகும். இதேவேளை கூரேயின் வெளியேற்றம் ஐ.தே கவில் பெரும்பிளவை ஏற்படாது விடினும் ஐ தே. க சாதாரண தொண்டர்கள் மத்தியில் அது தாக்கத்தை ஏற்படுத்துவது தவிர்த்துவிட முடியாதது.

---

சிறுபான்மையின கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றி முடிவிட்டனர் இதனையடுத்து இவ் வெல்லையூடாக தன்சானியாவிற்கு ஓடிக் கொண்டிருந்த றுவாண்டா அகதிகள் தடைப்பட்டுள்ளனர் றுவாண்டா பெரும்பான்மையின் ஹூடு அரச இராணுவத்திற்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் கடந்த சில வாரங்களாக நடைபெற்று வரும் உக்கிர மோதலையடுத்து றுவாண்டா அகதிகள் அயல்நாடான தன்சானியாவிற்கு இடம்பெயர்ந்தனர்

தற்போது தன்சானியாவுடனான றுவாண்டாவின் எல்லைப்பகுதி அரசபடைகளிடமிருந்து கிளர்ச்சியாளர்களின் கைக்குள் வீழ்ந்ததையடுத்து. இந்த எல்லைப்பகுதி கிளர்ச்சியளர்களால் மூடப்பட்டுள்ளது.

இதேசமயம் தன்சானியா [illegible] கேடுகள் ஏற்பட்டுள்ளதாக வும் பராமரிக்கக்கூடிய தொகையிலும்பன்மடங்கு தொகையில் அகதிசள் வந்துள்ளதால் பராமரிப்பை ஒழுங்காக மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும் தன்சானியா அதிகாரிகள் கூறினர்.

கடந்த ஓரிரு தினங்களில் எல்லைதாண்டி பல அகதிகள் வந்ததாகவும் கிளர்ச்சியாளர்கள் முன்னேறி வருவதையறிந்த றுவாண்டா அரசபடையின் எல்லைப்பாதுகாப்புப் படையினர் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டதால் அகதிகள் எல்லையை சுலபமாக கடந்து தன்சானியா வந்தனர்எனவும் தெரிவிக்கப்படுகிறது. தன்சாணியா அரசு வரலாற்றிலேயே இதுவரை கண்டிராத அகதிகள் பிரச்சினையை தற்போது றுவாண்டா அகதிகளை சமாளிப்பதில் கண்டுள்ளது அந்நாட்டு அரசு வெளிநாடுகளின் [illegible]

நாட்டின் வடக்கு - கிழக்குப் பகுதிகளைமுழுமையாக தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளனர் தலைநகர் கிகாலியில் அரச படைகளுடன் கடுமையான போர் வெடித்துள்ளது. கிளர்ச்சியாளர்கள் நேரடிப் போரை தவிர்த்து மெதுவாக முன்னேறி தலைநகரில் எஞ்சியுள்ளமூன்றுஅரச படைகளின் தளங்களை சுற்றி வளைப்பதிலேயே முனைப்பாக செயற்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. இவ்வமைப்பின் அரசியற்பிரிவு தலைவர் கருத்து வெளியிடுகையில், தலைநகர் ஒரு சில தினங்களில் தம்வசமாகும் எனத் தெரிவித்தார். இதை ஒப்புக் கொள்ளும் அரசியல் அவதானிகள் கிளர்ச்சியாளர்கள் சில வாரங்களில் இராணுவ வெற்றியை காணமுடியும் என கருத்து தெரிவித்துள்ளனர்

# தீவிரவாத வெள்ளையருடன் மண்டேலா சமாதானம் செய்ய முயற்சி

(ஜோகானஸ்பர்க்)

வெள்ளைஇன சிறுபான்மையினருடன் சமாதானம்செய்து கொள்ளும் முயற்சியிலேயே தமது அரசு தீவிரம் காட்டும் என்று ஆபிரிக்க தேசிய காங்கிரசின் தலைவரும், தென் ஆபிரிக்க ஜனாதிபதியாக வரக் கூடியவர் என்று எதிர்பார்க்கப்படுபவருமான நெல்சன் மண்டலோ கூறியுள்ளார்.

செய்தியாளர்களுக்கு அவர் பேட்டி அளிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார். மேலும் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த ஆபிரிக்காவின் தற்போதைய ஜனாதிபதி டி. கிளார்க் கூறுகையில் இந்த தேர்தலில் தமது ஆட்சி தோல்வியுற்றாலும் கூட அடுத்த தேர்தல் 1999ல் நடைபெறும் போது நிச்சயம் வெற்றி பெறும் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளது.


வீட்டுத்தோட்டம் செய்திடு ; உன்
நோட்டுச் செலவைக் குறைத்திடு


---

ந்த ஆண்டில் வெளியான இரு செய்திகள் மூலம் மீறியிருப்பதாக சட்டப் பேரவை உறுப்பினர்களான குமரி அனந்தன் மற்றும் ரங்கராஜன் ஆகியோர் தாக்கல் செய்திருந்த மனுவின் மீதே சட்டப் [illegible]

குறிப்பிட்ட செய்தி [illegible] தொடர்பாக பத்திரிகை ஆசிரியர் அளித்த பதில் திருப்திகரமானதாக இல்லை எனவும் விசாரணைக்குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# கரையோரப் படை விலகல்; வாழப்பாடி எதிர்க்கிறார்

(சென்னை)

தமிழகக் கரையோரப் பகுதியில் பணியில் ஈடுபட்டுள்ள சிறப்புக் காவல்படையினரை விலக்கிக் கொள்ள வேண்டாம் என்று தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், வெளிநாட்டுத் தீவிரவாத சக்திகளின் ஊடுருவல் அபாயம் இன்னமும் இருப்பதாகவும்' இதனால் இந்தப் படையினர் விலக்கிக் கொள்ளப்படக் கூடாது எனவும் தெரிவித்தார்.

### அமெரிக்க துருப்புக்கள் வெளியேற்றம்

# வியட்நாமிய 19வருட நிறைவு விழாக்களுக்கு ஏற்பாடு

(ஹனொய்)

வியட்நாமிலிருந்து அமெரிக்கப்படைகள் விரட்டப்பட்ட தன் 19ஆம் ஆண்டு நினைவு விழா வியட்நாமில் நடைபெற்று வருகிறதுஇதுதொடர்பான ஒரு வாரகால விழாவின் போது சர்வதேச சைக்கிள் ஓட்டப்போட்டி உட்பட பல நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுசெய்துள்ளது

இதே சமயம்ஹொங்கொங்கில் தாம் வியட்நாமுக்கு திருப்பியனுப்பப்படுவதை எதிர்த்து ஆயிரக்கணக்கான வியட்நாமிய அகதிகள் ஆர்ப்பாட்டம் செய்தனர். தாம் திருப்பியனுப்பப்பட்டால் அதை எதிர்த்து தீக்குளிக்கப் போவதாகவும் வியட்நாமிய அகதிகள் எச்சரித்துள்ளனர்;

# மேதினப்பேரணி இம்முறை கியூபாவில்நடைபெறவில்லை

1959இல் நடைபெற்ற கம்யூனிச புரட்சியின் பின்னர் கியூபா முதற் தடவையாக இம்முறை மேதினப் பேரணிகளை நடத்தவில்லை, பேரணியை ஏற்பாடு செய்யும் கியூபா தொழிலாளர் சபை நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக பேரணியை நடத்தவில்லை என அறிவித்தது.

எனினும் தொழிலாளர்களை கௌரவிக்கும் நிகழ்ச்சிகள் பெரியளவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது கிழமை மட்டங்களில் சிறிய அளவிலான ஊர்வலங்கள் நடைபெற்றன.

**தினகரன் ஆசிரியர் விவகாரம்**

# சட்ட சபை தீர்மானத்திற்கு கருணாநிதி கண்டனம்

(சென்னை)

சென்னையிலிருந்து வெளியிடப்படும் தினகரன் நாளிதழின் ஆசிரியர் முத்துப் பாண்டியனுக்கு தமிழக சட்டப் பேரவை பிறப்பித்துள்ள பிடியாணையை திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு. கருணாநிதி கண்டனம் செய்துள்ளார்.

இந்த சிறைத் தண்டனை பத்திரிகை சுதந்திரத்தின் மீது தொடுக்கப்பட்ட மிக மோசமான தாக்குதல் என்று சேலத்தில்கருணாநிதிநேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் கிள்ளிவளவன் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் இத் தண்டனை மிகவும் அதிகமானது எனக் குறிப்பிட்டுள்ளார்.

பத்திரிகை உலகத்திற்கும், சட்டப் பேரவைக்கும் இடையே நிலவ வேண்டிய நல்லுறவைக் கருத்திற்கொண்டு இத் தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்று மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் செயற்குழு கூறியுள்ளது. உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், பத்திரிகையாளர் கிட்டு உட்பட பல பத்திரிகையாளர் அமைப்புகளும் இத் தண்டனை குறித்து கடும் கண்டனம் வெளியிட்டுள்ளன

# அ. தி. மு. கவிற்கு முஸ்லிம்லீக் ஆதரவு

(சென்னை)

திருப்பெருந்துறை மற்றும் மைலாப்பூர் தொகுதிகளில் நடைபெறவிருக்கும் சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கான இடைத் தேர்தல்களில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை தமது கட்சி ஆதரிக்கும் என்று அகில இந்திய முஸ்லிம் லீக் கட்சியின் அகில இந்தியப் பொதுச்செயலாளர் ஏ. எஸ். அப்துல் சமது கூறியுள்ளார்

நேற்று முன் தினம் திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய போது அப்துல் சமது இதனைத் தெரிவித்தார்.

# பிரிட்டன் - ஈரான் உறவு மேலும் மோசமடைகிறது

வட அயர்லாந்தின் ஐ.ஆர்.ஏ. கெரில்லாக்களுடன் ஈரான் தொடர்பு கொண்டுள்ளதாக பிரிட்டன் அறிவித்ததையடுத்து ஈரான் - பிரிட்டன் உறவில் மீண்டும்கொந்தளிப்பு நிலை ஏற்பட்டுள்ளது.

முன்னதாகஇத்தொடர்பை மறுத்த ஈரான் அரசு பிரிட்டனே ஈரானுக்கு எதிரான குழுக்களை தனது நாட்டில் பேணி வருவதாக பதில் குற்றச்சாட்டை வெளியிட்டது. இதற்கு ஆதாரத்தை காட்டுமாறு பிரிட்டன் ஈரானிடம் பதிலுக்கு சவால் விட்டது.

எந்த நாட்டினதும் எதிர்த் தரப்புகள் பிரிட்டனில் சுதந்திரமாக இயங்க முடியும். எமது சட்டங்களை மீறினாலேயே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் பிரிட்டன் தெரிவித்தது.

# தேசிய பாடசாலை ஆசிரியர் 120 பதவி வெற்றிடம்

(கொழும்பு)

தேசியப் பாடசாலை ஆசிரியர் வெற்றிடம் உள்ளதால் மே 16ஆம் திகதிக்கு முன்னர் இந்த வெற்றிடத்தை நிரப்ப விண்ணப்பிக்கும் படி கல்விச் சேவை சபை கேட்டுள்ளது.

120 ஆசிரியர்களுக்கு வெற்றிடம் உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

# பிரேமாவை கௌரவிப்பது எமது கடமையாகும்

**- ரணில்**

அமரர் பிரேமதாசாவைக் கௌரவிப்பது நமது கடமை

ரணில் வெளியிட்ட செய்தியில் மேலும் குறிப்பிடுகையில்

# பரவலான அதிகார பரவலாக்கலே இனப்பிரச்சினையை தீர்க்கும்

**சந்திரிகா குமாரணதுங்கா**

(கொழும்பு)

பரந்த அளவிலான ஒரு அதிகாரப் பரவலாக்கலின் மூலமாகவே இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என கூறியிருந்தோம். அத்துடன் மாகாண எல்லைகளை மாற்றியமைப்பது தொடர்பாக ஆராய்வதற்கு தயார் என்பதனையும் நாம் அறிந்திருந்தோம் என மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகாகுமாரணதுங்கா கொழும்புபத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்தார்,

அவர் அப்பேட்டியில் மேலும் கூறுகையில்:

வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்குஒரு நியாயமான தீர்வு சாத்தியமானது என நீங்கள் நம்புகிறீர்களா? அப்படியாயின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அணுகு முறை என்ன? எனக் கேட்டதற்கு

இப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணமுடியும் என நாம் நிச்சயமாக நம்புகிறோம் ஆனால் இது இலகுவானதாக இருக்கப் போவதில்லை ஏனென்றால், 17 வருடங்களுக்கு முன்னர் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஆட்சிக்குவந்த ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம், இப் பிரச்சினைக்கு தீர்வு எதனையும் காணவில்லை- அப்போது இப் பிரச்சினை இப்போதுள்ளதைப் போல கூர்மையடைந்து இருக்கவில்லை- இந்தப் 17 வருட காலத்தில் அரசாங்கம் தீர்வொன்றைக் கொண்டு வராதபடியால் தீர்வொன்றை அமுல் செய்வது கடினமானதாகவே இருக்கும்- ஏனென்றால் இரு தரப்பினரும் தமது நிலைப்பாடுகளைத் தீவிரப்படுத்திக் கொண்டுள்ளனர் ஆனாலும் இது சாத்தியமானதொன்றாகவே இருக்கிறது-

விடுதலைப் புலிகள் தமது கொள்கையில் பிடிவாதமாக இருப்பதனால், இது பிரச்சினையானதாக உள்ளது என நான் நினைக்கிறேன். அரசியல் ரீதியான பேச்சுக்கு விரும்புபவர்கள் போல தோன்றவில்லை. வடக்கு—கிழக்கிலுள்ள பெரும்பாலான தமிழர்கள் சமாதானமான தீர்வு ஒன்றையே விரும்புவார்கள் என நான் நினைக்கிறேன்: அவர்கள் இந்த யுத்தத்தால் களைப்படைந்துள்ளனர். சிறிலங்கா சுதந்திரக்கட்சி அதனுடைய அண்மைய கொள்கை அறிக்கையில் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான அடிப்படையை தெளிவாகத் தெரிவித்திருந்தது.

பரந்த அளவிலான ஒரு அதிகாரப் பரவலாக்கலின் மூலமாகவே இதற்குத் தீர்வு காணமுடியும் என நாம் கூறியிருந்தோம். வடக்கு—கிழக்கிற்கு மட்டுமல்ல சகல மாகாணங்களுக்கும், அத்துடன் மாகாண எல்லைகளை மாற்றியமைப்பது தொடர்பாக நாம் ஆராய்வதற்குத் தயார் என்பதனையும் நாம் அறிவித்திருக்கிறோம் அந்த அடிப்படையில் ஒரு குழு அறிவித்துள்ளது அது பல்வேறு சாதகமான நிலைகளையும் ஆராய்ந்து வருகிறது.

அமைச்சரவையில் வடக்குக் கிழக்குத் தமிழர் எவரும் இடம்பெறவில்லை. தீர்மானம் மேற்கொள்ளப்பட வேண்டிய காலத்தில் தமிழர்கள் அனைவரையும் பிரதிநிதித்துவப்படுத்துவதை சுதந்திரக்கட்சி அரசாங்கம் உறுதிப்படுத்துமா? என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில்,

நிச்சயமாக அதனைச் செய்வோம்- கட்சியின் உயர் மட்டத்திலுள்ள பலர் இதனையே விரும்புவதாக நான் உணர்கின்றேன்- மத்திய அரசாங்கத்திற்கும் வடக்கு கிழக்கு மாகாணசபைகளுக்கும் இடையே உறவு முறிவடைந்தமைக்குப் பிரதான காரணம் அவர்களுக்கிடையேயான தொடர்பின்மையாகும் பேச்சு வார்த்தைகளைத் தொடரவேண்டும்- புதிய அமைப்புக்களை உருவாக்கியிருக்க வேண்டும் இதை வடக்கு கிழக்கு மக்களுடனும் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தைநடத்தக் கூடியதாக இருக்கவேண்டும்-

உத்தியோக பூர்வ மொழிகள் ஆணைக்குழு சக்திவாய்ந்ததாக உள்ளதா?- உலகில் பல விதமான சட்டங்கள் உள்ளன- ஆனால் பதவியிலுள்ள அரசாங்கங்கள் இதனைச் சிறப்பான முறையில் இயங்க வைப்பதற்கு முயலாது விட்டால் அவை பயனுள்ளவை ஆகமாட்டா- உத்தியோக பூர்வமொழி ஆணைக்குழு சட்டரீதியாக பலப்படுத்தப்பட்டவையாக இருப்பினும் அரசாங்கங்கள் அவற்றை உணர்ந்துகொள்ள வேண்டும் சிறுபான்மையினரைப் பொறுத்தவரையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உண்மையாக உணருவது என்ன வென்றால் சிறுபான்மையினரும் இந்த நாட்டுப் பிரசைகளே அவர்களும் தமது உரிமைகளை அனுபவிக்க வேண்டும் இந்த உரிமைகளை ஊர்ஜிதப் படுத்த வேண்டும் என்பதை நாம் உணருகின்றோம். பிரச்சினைக்குத் தீர்வொன்றைக்காண்பதற்காக என்ன மாற்றுத்திட்டம் உள்ளது என்றபோது

இதற்கான திட்டமொன்றை விரைவில் நாம் வெளியிடுவோம், கட்சி நிலைமை மாறிக்கொண்டிருக்கும்போது நான் இதனை இப்பொழுதே சொல்ல விரும்பவில்லை, இனப் பிரச்சினைக் கானதீர்வு என்னஎன்பதை அறிக்கையில் தெரிவிக்கப்படும்.

சிறுபான்மையினரின் மனக்குறைகளைத் தீர்த்து அவர்களை தேசிய அரங்கிற்குக் கொண்டுவருவதற்கான உங்களுடைய திட்டம் என்ன? என்றபோதுபொதுவான கேள்விகளைக்கேளுங்கள் என்றார்

## யாழ்நகரில்

ஒவ்வொரு கோட்டங்களினதும் வட்டங்களினதும் அணிகள் தமது தரிப்பிடங்களில் இருந்து நகர்ந்து செல்லும் பேரணியுடன் இணைந்து கொண்டன.

ஆண்கள், பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள், மாணவர்கள் என்று சமூகத்தின் அனைத்துத் தரப்பு மக்களும் இப் பேரணியில் கலந்து கொண்டனர். பேரணியில் கலந்து கொண்ட மக்கள் அனைவரும் சிங்கள அரசுக்கெதிராகவும் அடக்குமுறை சக்திகளுக்கெதிராகவும் வானதிரக் கோஷம் எழுப்பிய வண்ணம் சென்றனர். அத்துடன் எழுச்சியூட்டும் வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும், சுலோக அட்டைகளையும் தாங்கிச்சென்றனர். பேரணியின் ஆரம்பத்தில் தமிழீழத் தேசியத் தலைவரின் பிரமாண்டமான உருவப்படம் தாங்கிச் செல்லப்பட்டது. அதைவிட தேசியத் தலைவரின் நூற்றுக்கணக்கான உருவப்படங்களை பேரணியில் கலந்துகொண்ட மக்கள் தாங்கிச்சென்றதை அவதானிக்க முடிந்தது.

அத்துடன் பேரணியின் இடையிடையே நூற்றுக்கணக்கான ஊர்திகள் நகர்ந்து சென்றன. தமிழீழ மக்களுக்கெதிராகவும் தமிழீழ தேசியத்துக்கெதிராகவும் இனவெறி ஆட்சியாளர்களாலும், அடக்குமுறை சக்திகளினாலும் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் இன அழிப்பு நடவடிக்கைகளைச் சித்திரிக்கும் ஊர்திகள் ஒருபுறம், இந்த சக்திகளின் நடவடிக்கைகளினால்உருவாகிய அவலங்களை சித்திரிக்கும் ஊர்திகள் இன்னொருபுறம், மேற்படி அவலங்களில் இருந்து தம்மை விடுவிப்பதற்காகவும், தமிழீழத் தாயகத்தை வென்றெடுப்பதற்காகவும் உறுதியுடன் போராடும் மக்களையும், இனவாத சிங்கள ஆயுதப்படைகளுக்கெதிராக விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் போராட்ட வடிவங்களையும் தத்துருபமாகச் சித்திரிக்கும்

## சர்வதேச

வில் தமது கோசங்களையும், கோரிக்கைகளையும் முன்வைப்பதுடன்நின்றுவிடக்கூடாது. உண்மையிலேயே பாட்டாளி வர்க்கத்தின் எதிர்காலம் சுபீட்சமாக அமைய வேண்டுமாக இருந்தால் சர்வதேச பாட்டாளி வர்க்கம், எமது பாட்டாளி வர்க்கம் போராடும் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை உடனடி

என்றார்

காலம் காலமாக ஒடுக்கப்பட்ட நாம் இன்று எமது உரிமைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கிறோம் இப்போராட்டத்தில் நம் படிப்படியாக வளர்ச்சியடைந்து வருகின்றோம். நாம் இன்று நாட்டு விடுதலைக்காக மட்டுமல்ல அனைத்து விடுதலைக்காகவும் போராட வேண்டியுள்ளது இவ்வாறு இதே கூட்ட

# மக்களின் விருப்புக்களை பிரேமா புரிந்திருந்தார்

**- கூரே**

(கொழும்பு)

அமரர் பிரேமதாசா மக்களின் விருப்பு வெறுப்புகளையும் உணர்வுகளையும் நன்கு புரிந்து கொண்டிருந்தார் என்று வீடமைப்பு நகர அபிவிருத்தி அமைச்சர் சிறிசேன கூரே தெரிவித்தார். புதுக்கடை சந்தியில் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தலைமையில் நடைபெற்ற சிலை திறப்பு வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், தாம் நம்பிக்கை வைத்த கோட்பாட்டின் மூலம் மக்களுக்கு சேவையாற்றுவதற்கு அவர் உறுதி பூண்டிருந்தார் என்றும் தெரிவித்தார்

இவ் வைபவத்தில் உரையாற்றிய அமைச்சர் சௌ. தொண்டமான் கூறுகையில், தோட்டத் தொழிலாளர்கள் இழந்த உரிமைகளை மீண்டும் நிலைநாட்ட பிரேமதாசா அத்திவாரமாக இருந்தார் என்றும், பல்வேறு சமூக, இன மக்களுக்கு இடையேயும் சுமுகமான உறவை நிலைநாட்ட பாடுபட்டார் என்றும் தெரிவித்தார்.

# உதைபந்தாட்ட போட்டிகள்

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் நடாத்தும் 9பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி உரும்பராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இப் போட்டித் தொடரின் இன்றைய போட்டிகள்

ஃ ஆர், டி, எஸ் விளையாட்டுக்கழகம்எதிர் யங்கென்றிஸ்விளையாட்டுக்கழகம்

ஃ மாவத்தைவிளையாட்டுக் கழகம் எதிர் அறிவொளி விளையாட்டுக் கழகம்

ஃ ஃ

அளவெட்டி விநாயகர் விகழகம் மகாஜனக் கல்லூரியின் இணுவில் மைதானத்தில் நடாத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இன்றைய போட்டிகள்

முதல் பிரிவு

# பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி டி.பி விஜேதுங்காவை கொலை செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக சி ஐ டியினர்அறிவித்ததைத் தொடர்ந்து அவர் கலந்துகொள்ளும் பொதுநிகழ்ச்சிகளின் போது டி. பி விஜேதுங்காவிற்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட [illegible] வலியுறுத்தப் [illegible]

மேலும் இவ் எச்சரிக்கையுடன் சம்பந்தப்பட்டவர்கள் மீது தீவிர கண்காணிப்புடன் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## எமது கடமையாகும்

**- ரணில்**

அமரர் பிரேமதாசாவைக் கௌரவிப்பது நமது கடமையாகும் என்று சிறிலங்கா அரசின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியின் முதலாமாண்டு நினைவு தினத்தை முன்னிட்டு பிரதமர் ரணில் வெளியிட்ட செய்தியில் மேலும் குறிப்பிடுகையில், ஏழை மக்களின் துன்பத்தைப் போக்க அவர் ஆற்றிய அரும் பணிகளை நினைவுகூரவும், அவரைக் கௌரவிக்கவும் நாம் மறக்கக்கூடாது எனவும் தெரிவித்துள்ளார்.

# சிலை தந்தையாரை பிரதிபலிக்கவில்லை

**பிரேமாவின் மகன் சஜித்**

கொழும்பு புதுக்கடைச் சந்தியில் நேற்று முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தலைமையில் திறந்து வைக்கப்பட்ட உருவச் சிலை சரியான முறையில் தமது தந்தையைப்பிரதிபலிக்கவில்லையென்று முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மகன் சஜித் பிரேமதாசா கூறியுள்ளார்.

பதினெழு லட்ச ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட இச் சிலை தொடர்பாக தமது குடும்பத்துடன் எதுவும் கலந்தாலோசிக்கப்படவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மரண அறிவித்தல்

## க. சரவணமுத்து

(பலாலி கிழக்கு, வயாவிளான்)

பலாலி கிழக்கு வயாவிளானை பிறப்பிடமாகவும் தற்போது நீர்வேலி வடக்கை வதிவிடமாகக் கொண்ட க. சரவணமுத்து அவர்கள் 01-5-94 இல் காலமானார். இவர் பொன்மணியின் அன்புக் கணவரும், குகநேசன் (சுவிஸ்), றஞ்சினி, லோகநாதன், தயாநிதி (வயாவிளான் ம. ம வித்தியாலயம்) புஸ்பரஞ்சினி, சிறிதரன், சுதர்சினி (வயாவிளான், ம. மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், தி. தில்லைநாதன். அவர் [illegible] மாமனாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இன்று முற்பகல் 10 மணிக்கு நீர்வேலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்!

**சி. வேலுப்பிள்ளை**

காமாட்சி அம்பாள் சனசமூக
நிலையத்திற்கு அருகாமை,
நீர்வேலி

((8179)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1994ஆம் ஆண்டு மே மாதம் 02ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தப்படைகளுக்கெதிராக விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் போராட்ட வடிவங்களையும் தத்துருபமாகச் சித்திரிக்கும் ஊர்திகள் மற்றொருபுறமாக நூற்றுக்கணக்கான ஊர்திகள் பேரணியின் இடையிடையே பவனி சென்றதைக் காணக் கூடியதாக இருந்தது

சுமார் ஐந்து மைல்களுக்கு மேற்பட்ட நீளம் கொண்ட இந்தப் பேரணி குறிப்பிட்ட ஒரு புள்ளியைக் கடந்து செல்வதற்கு சுமார் இரண்டுமணித்தியாலங்கள் வரையான நேரத்தை எடுத்தது. காங்கேசன்துறை வீதியூடாக நகர்ந்து சென்ற பேரணி நாச்சிமார்கோயிலடி, இராமநாதன் வீதி, கலட்டிச் சந்தி, பிறவுண் வீதியூ ாக யாழ். பல்கலைக்கழக மருத்துவப் பீட மைதானத்தை சென்றடைந்தது

பேரணியுடன் அணிவகுத்துச் சென்ற விடுதலைப் புலிகளின் அனைத்து அணியினரும் மைதானத்தில் காட்சி அணிவகுப்பு நிகழ்ச்சிகளைச் செய்தனர். இக்காட்சி அணிவகுப்பை மைதானத்தில் குழுமியிருந்த மக்கள் முண்டியடித்துக் கொண்டு பார்வையிட்டனர்.

இம் மைதானத்தில் விசேடமாக அமைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்ட மேடையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. சிவப்பு, மஞ்சள் வர்ணத் தோரணங்களாலும், மின்விளக்குகளாலும் இம் மைதானம் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இப் பொதுக்கூட்டத்திலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். (க)

**யாழ். ஸ்ரீதரில்...**

தினசரி மாலை 4, 6 மணி
சனி, ஞாயிறு காலை 10.30
மாலை 4, 6 மணி

**காற்றுவெளி**

சனி, ஞாயிறு 2.30 மணிக்கு

**ஒளிவீச்சு**

(சி-9290)

இருந்தால் சர்வதேச பாட்டாளி வர்க்கம், எமது பாட்டாளி வர்க்கம் போராடும் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை உடனடியாக அங்கீகரிக்க வேண்டும் இதன் மூலம் தான் சர்வதேச பாட்டாளி வர்க்கம் எதை எதிர் பார்க்கிறதோ அதை அடைய முடியும். எமது பாட்டாளி வர்க்கம் இன்று எமது தேசிய விடுதலை இயக்கத்துடன் இணைந்து பெரிய போராட்டத்தைநடாத்திக்கொண்டிருக்கிறது

நாம் அமைக்கப்போகும் தமிழீழம் ஒரு உண்மையான சமதர்ம அரசாக அமைய வேண்டுமாயின் இன்று எமது பாட்டாளிவர்க்கம் ஆயுதம் ஏந்தி சிங்களப் பேரினவாதத்துக்கு எதிரான யுத்தத்தில் தம்மை முற்றுமுழுதாக அர்ப்பணிக்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்-

யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு இளம்பரிதி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் நீதி நிர்வாகப் பொறுப்பாளர் திரு பரா அவர்களும் உரை நிகழ்த்தினார்- அவர் தனது உரையில் இன்று இனவாத சிங்கள அரசு தனது முழுப்பலத்தையும் பயன்படுத்தி எமது இனத்தை அடக்கு முறைக்குட்படுத்த முயற்சித்து வருகிறது ஆனால் நாம் சிங்கள அரசின் அடக்குமுறை வடிவங்களாகிய அனைத்துத் தாக்குதல்களையும் உலகம் வியக்கும் வகையில் முறியடித்து வருகின்றோம் அதுமட்டுமன்றி எமது மக்கள் சுதந்திர உணர்வுடன் வாழுவதற்காக பல்வேறு அரசியல் பொருளாதார சட்டு மானங்களையும் நாம் மேற்கொண்டு வருகின்றோம்-

இன்று எமது மக்கள் பல்வேறு இன்னல்கள் மத்தியிலும் மேதின நிகழ்வுகளில் கலந்துகொள்கிறார்கள் என்றால் அது எமது மக்கள் போராட்டத்தில் இருந்து அன்னியப்படவில்லை என்பதையே எடுத்துக்காட்டுகிறது

ன்றோம். நாம் இன்று நாட்டு விடுதலைக்காக மட்டுமல்ல அனைத்து விடுதலைக்காகவும் போராட வேண்டியுள்ளது இவ்வாறு இதே கூட்டத்தில் உரை நிகழ்த்திய விடுதலைப் புலிகளின் மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி தணிகைச் செல்வி தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசும் போது நாம் எவருக்கும் தலைகுனியமாட்டோம் நாம் தலை நிமிர்ந்து போராடுவதெல்லாம் எமது மக்கள் எவருக்கும் அடிபணியாமல் வாழ வேண்டும் என்பதற்காகவே என்றும் அவர் தெரிவித்தார்

''தமிழீழப் போராட்டமும் மேதினப் போராட்டமும் ஒன்றில் இருந்து ஒன்று பிரிக்கப்பட முடியாதவை. வரலாற்றுக் காலம் தொட்டு தமிழர்கள் அடக்கு முறைக்கு எதிராகப் போராடி வந்துள்ளனர்'' இவ்வாறு மேற்படி கூட்டத்தில் உரைநிகழ்த்திய கடற்புலிகளின் பிரமுகர் திரு. வாஞ்சிநாதன் தெரிவித்தார். இன்று உலக அரங்கில் போற்றப்பட்டு வரும் திறமை மிக்க தலைவர் பிரபாகரன் அவர்களின் தலைமையின் கீழ் எமது விடுதலைப் போராட்டம் நடைபெற்று வருகிறது. இத் தலைமையின் கீழ் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து போராடுவதற்கு சபதம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும்அவர் மேலும்பேசும்போது தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் கூட்டுறவு ஊழியர் சங்கத்தின் சார்பில் திரு. சூ. அன்ரனி, கிராமிய உழைப்பாளர் சங்கத்தின் சார்பில் திருமதி சந்திரராணி தவராசா, சீமெந்துக் கட்டிடத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் திரு. ஆ. அல்விஸ், கடற் தொழிலாளர் சார்பில் திரு த. சுந்தரலிங்கம், தெங்கு பனம் பொருள் உற்பத்தியாளர் சார்பில் திரு. சிவனேசன், கல்விசார் ஊழியர்கள்சார்பாகதிரு இ. மகேந்திரம் ஆகியோரும் இக் கூட்டத்தில் உரை நிகழ்த்தினார்கள்.

யின் இணுவில் மைதானத்தில நடாத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இன்றைய போட்டிகள்

முதல் பிரிவு

பொற்பதி ஐ வி- கழகம் எதிர் வயவைவி - கழகம் ஸ்கந்தா ஐ வி கழகம் எதிர் ஏ- எல் (அராலி) வி- கழகம்

இரண்டாம் பிரிவு

வளர்பிறை வி. கழகம் எதிர் வயவை வி- கழகம் என்பன மோதும்

போட்டி மாலை 2-30 மணிக்கு ஆரம்பமாகும்

## சிறிசேன கூரே

வகிக்குமாறு கேட்டுக்கொண்டார் எனவும் அமைச்சர் சிறிசேனகூரே தெரிவித்தார்.

இதேவேளை கொழும்பில் நேற்று நடைபெற்ற முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் உருவச் சிலை திரைநீக்கம் செய்யும் வைபவத்தில் கலந்துகொண்டு பேசிய அமைச்சர் சிறிசேன கூரே கட்சியின் பொதுச் செயலாளர் பதவியைத் துறக்க இருப்பது பற்றி பகிரங்கமாக குறிப்பிட்டார்.

ஜனாதிபதியும் கட்சியின் தலைவருமான டி. பி. விஜேதுங்காவின் அணுகுமுறைகளுடன் தம்மால் ஒத்துப் போக முடியாமல் இருப்பதாக தெரிவித்து அதனாலேயே, தமது பதவியைத் துறக்க முன்வந்ததாகவும் மேலும் தெரிவித்தார்.

## இனப்

புதிய அரசுத் தலைவர் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மிகக் கடுமையான போக்கைக் காட்டியபோதும் தென் பகுதியில் தனது செல்வாக்கை தக்கவைத்துக்கொள்ள முடியாதவராகவேகாணப் படுகின்றார் எனவும் பி. பி. ஸி மேலும் குறிப்பிட்டது

## எதிர்க்கட்சி

க்க முடியும் என்ற நம்பிக்கையும் காணப்பட்டதாக பி, பி. ஸியின் கொழும்பு முகவர் ஜோர்ஜ் ஆர்னி கூறியுள்ளார்.

மேலும் இவ் எச்சரிக்கையுடன் சம்பந்தப்பட்டவர்கள் மீது தீவிர கண்காணிப்புடன் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பரந்த

இதேநேரத்தில் பல்வேறு நாடுகளில் பல்வேறு விதமாக இது கொண்டாடப்படுகிறது.

ஆனால் இன்று தமிழீழத்திலே அந்த மேதினத்தினுடைய உள்ளடக்கம் அடக்கு முறையினுடைய எதிரான அந்த போராட்டத்தின் விரிவான தன்மை வேறொரு தொனிப் பொருளிலே மிகவும் விரிவாக இங்கே நினைவு கூரப்படுகிறது.

1886 ஆம் ஆண்டிலே சிக்காக்கோ நகரத்தெருக்களிலே தொழிலாளர் தங்களுடைய உரிமைக்காக போராடிய பொழுது சுட்டுக் கொல்லப்பட்ட நிகழ்வானது மேதினத்தின் உண்மையான உள்ளடக்கம் அடக்கப்படுகின்ற மக்கள் போராட வேண்டும் என்ற தொனியை விரிவாக்கம் செய்து இன்று இங்கே வித்தியாசமான முறையிலே நாம் கொண்டாடிக்கொண்டிருப்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டிய தேவை எமக்கிருக்கின்றது.

கொழும்பில் பல்வேறு அரசியல் கட்சிகள் பழைய தமிழ்க் குழுக்கள் எல்லாமே தேர்தலை நோக்கி கடைகளை விரித்து காத்துக் கொண்டிருக்கின்றன. பெரும்பான்மை சிங்களவர் அரசமைப்பதென்றால் சிறுபான்மை தமிழர் உதவி இல்லாமல் அமைக்க முடியாதென்று கூறிக்கொண்டு தமிழ்க் குழுக்களும் இஸ்லாமியர் இரண்டு பக்கத்திற்கும் தேவையென்று சில கருத்துக்களை கூறிக்கொண்டு பேரம் பேசுகின்ற தன்மையை இதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நப்பாசையிலே மக்கள் வரலாற்றை மறந்துவிட்டதாக நினைத்துக் கொண்டு செயல்படுவதை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.